வாய்மொழி வரலாறுகள்

02

நடராஜா செல்வராஜா

வாய்மொழி வரலாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜா செல்வராஜா வாய்மொழி வரலாறு

நேர்காணல்
கனோல்ட் டெல்சன் பத்திநாதர்

தொகுப்பும் பதிப்பும்
தில்லைநாதன் கோபிநாத்
கலாமணி பரணீதரன்

ஜீவநதி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜா செல்வராஜா
வாய்மொழி வரலாறு

நேர்காணல்	: கனோல்ட் டெல்சன் பத்திநாதர்
தொகுப்பும் பதிப்பும்	: தி.கோபிநாத், க.பரணீதரன்
உரிமம்	: CC BY-SA 4.0 (Creative Commons-Attribution-ShareAlike)
வடிவமைப்பு	: க.பரணீதரன்
வெளியீடு	: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்
அச்சகம்	: பரணி அச்சகம், நெல்லியடி.
பக்கங்கள்	: 52
முதலாம் பதிப்பு	: 2024 மாசி
விலை	: 250/-
ISBN	: 978-955-0958-51-1

ஜீவநதி வெளியீடு - 328

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜா செல்வராஜா வாய்மொழி வரலாறு

இந்த வாய்மொழி வரலாற்று நேர்காணலானது 2018.10.08 திங்கட்கிழமை. அன்று நூலக நிறுவனத்தின் வாய்மொழி வரலாற்று ஆய்வு நிலையம் செயற்றிட்டம் மூலம் பதிவு செய்யப்பட்டதாகும். நூலக நிறுவனத்தில் பணி யாற்றிய கனோல்ட் டெல்சன் பத்திநாதர் பதிவு செய்த இந்த நேர்காணல் இயல்பான ஓர் உரையாடலாகவே பதிவுசெய்யப்பட்டது என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

வணக்கம் ஐயா

வணக்கம்

உங்களைப் பற்றி சொல்ல முடியுமா?

எனது பெயர் செல்வராஜா. என்னுடைய தந்தையார் பெயர் வல்லிபுரம் நடராஜா. அவர் நீர்கொழும்பில் ஓவசியராக (PWD) பணியாற்றினார். அவரது காலகட்டத்தில் நீர்கொழும்பில் தண்டுகம எனும் பிரதேசத்தில் 1954ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ம் திகதி நான் பிறந்தேன். நான் அக் குடும்பத்தின் கடைசி வாரிசாகப் பிறந்தேன்.

எனது மூத்த சகோதரர் வைத்திய கலாநிதி Dr.N.சிவ ராஜா. அவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சமூக மருத்துவத் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமை யாற்றி ஓய்வு பெற்றிருக்கின்றார். அதன் பின்னர் தற்போது ஐக்கிய நாடுகள் தாபனத்தின் WHO நிறுவனத்தின் வட மாகாண இணைப்பாளரகக் கடமையாற்றி வருகிறார். எனது மூத்த சகோதரி சிவனேஸ்வரி, யாழ்ப்பாணத் தொழில் நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் பின்னர் அதிபராகவும் பணியாற்றிய ஸ்ரீ விக்கினேஸ்வரன் அவர்களது துணைவியார். மூன்றாவதாகப் பிறந்தவர் எனது சகோதரி மகேஸ்வரி. அவர் பரந்தன் இரசாயனப்பொருட்கள் கூட்டுத் தாபனத்தில் பணியாற்றிய நித்தியானந்தன் அவர்களின் துணைவியார். அவருக்கு அடுத்தவராகப் பிறந்தவர் என்.விக்னராஜா. அவர் இலங்கையின் பல்வேறு பிரதேசங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் அரசாங்க நில அளவையாளராகப் பணியாற்றி பின்னர் தற்போது புலம் பெயர்ந்து லண்டனில் குடும்பத்த வருடன் வசிக்கின்றார். அடுத்தவர் என்.ஸ்ரீஸ்கந்தராஜா. அவர் தற்போது நோர்வேயில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகின்றார். அவர்களுக்கு அடுத்தாக கடைக்குட்டியாக நான் பிறந்தேன்.

எனது பதினாறாவது வயது வரை நீர்கொழும் பிலேயே கல்வி கற்றேன். நீர்கொழும்பு விவேகானந்த வித்தியாலத்தில் 7ஆம் வகுப்பு வரை கல்வி கற்றேன். அப்பாடசாலையே நீர்கொழும்பில் இயங்கிய ஒரேயொரு சைவத் தமிழ்ப் பாடசாலையாகும். தற்போது அப் பாட சாலை விஜயரட்ணம் மத்திய கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்பாடசாலையில் கல்வி கற்றதைத் தொடர்ந்து, நீர்கொழும்பு சென் மேரிஸ் கல்லூரியில் எட்டாம் வகுப்பில் சேர்ந்து கல்வி கற்றேன். தரம் 8 லிருந்து க.பொ.த சாதாரண தரம் வரை அங்கு கல்வி கற்றேன்.

எனது பதினாறாவது வயதில் 17.12.1970இல் எமது தந்தையார் காலமாகியதைத் தொடர்ந்து நீர்கொழும்பி லிருந்து அம்மாவின் பிறப்பிடமான யாழ்ப்பாணத்தின் ஆனைக்கோட்டைக்கு குடிபெயர்ந்தோம். எனது உயர் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்றேன். 1976இல் நூலகவியல் துறையில் ஈடுபாடு கொண்டு நூலகவியல் டிப்ளோமாக் கல்வியைத் தொடர்ந்தேன். அக்காலத்தில் நூலகவியல் டிப்ளோமா 3 தரங்களில் காணப்பட்டது. முதலாம் தரம், இரண்டாம் தரம், மூன்றாம் தரம் என இவை மூன்றையும் கல்வி கற்று முடிக்க எனக்கு சுமார் எட்டு வருடங்களானது. காரணம் அந் நாட்களில் நூலகவியல் கல்வி விரிவுபடுத்தப்பட்ட, ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கவில்லை.

இடைநிலைக் கற்கை வரை அதனை நான் கற்ற பின்னர் சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் 24.05.1978இல் பாடசாலை நூலகராகக் கடமையாற்றத் தொடங்கினேன். அங்கு ஒருவருடம் பணியாற்றியதைத் தொடர்ந்து, 1979 ஏப்ரல் தொடக்கம் சர்வோதாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமதானச் சங்கத்தின் புங்குடுதீவு வளாகத்தில் மத்திய நூலகராகப் பணியாற்றினேன். இங்கு கடமையாற்றத் தொடங்கிய காலகட்டத்தில் எனக்கு உள்ளூராட்சி அமைச்சின் நூலகர் பதவி பெப்ரவரி 1980இல் கிட்டியது. தரம் மூன்று நூலகராக திருக்கோணமலை மாவட்டத்தின் முள்ளிப்பொத்தானை கிராமத்தில் 75 புத்தகங்கள் கொண்ட பொது நூலகத்தில் நூலகராகப் பதவியேற்றேன்.

இந்நிலையில் 12.05.1980இல் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்வி விஜயலட்சுமி செல்வத்துரையுடன் பதிவுத் திருமணமாகியது. எங்களது திருமணம் காதல் திருமணமாக அமைந்தது. தற்போது எங்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்தவர் சௌமியா. அவர் இப்போது திருமணமாகி லண்டனில் வசிக்கின்றார். அவருக்கு ஓவியா, அர்ச்சனா என இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். இரண்டாவது மகன் கௌதமன். அவர் தனது முதலாமாண்டு கல்வியுடன் புலம்பெயர்ந்ததால் அவருடைய கல்வி முழுவதையும் இங்கிலாந்திலேயே பெற்றுக் கொண்டார். அவர் தற்போது கட்டடக் கலை வல்லுனராகப் பணியாற்றுகின்றார். மூன்றாவது மகள் மௌலியா. தனது பத்தாவது வயதிலேயே Dangerous New World என்ற கதையொன்றை புத்தகமாக்கி, அன்றைய பிரித்தானியப் பிரதமர் டோனி பிளையரினால் No 10 டௌனிங் ஸ்ட்ரீட் என்ற அவரது அரச இல்லத்துக்கு அழைத்து கௌரவிக்கப்பெற்றவர். இன்றும் அவர் எழுதுவதைக் கைவிடவில்லை. அவர் கண் வைத்தியத்துறையில் பணியாற்றி, பிரித்தானியாவின் அரச மருத்துவத் துறையில் பணியாற்றுகின்றார். காலத்திற்கு காலம் முல்லைத்தீவிற்கு வருகை தந்து இலவச கண்சிகிச்சைகளைச் செய்து வருகின்றார்.

சர்வோதய நூலகத்தில் பணியாற்றிய கால கட்டம் என்னுடைய வாழ்வில் முக்கியமான கால கட்டம் என்று குறிப்பிடலாம். சர்வோதய நூலகத்தினைப் பொறுப்பேற்று முழுமையாக வளர்த்தெடுக்கும் பணி எனக்கு கிடைத்தது. பெரும்பாலும் நூலகத்தில் பணியாற்றச் செல்கின்றவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு இயங்கு நிலையில் உள்ள நூலகத்தையே பொறுப் பேற்று தொடரும் வழக்கம் இருக்கும். என்னைப் பொறுத்த வரையில் அடிஅத்திவாரத்தில் இருந்து நூலகத்தை செயற் படுத்த வேண்டியிருந்தது. பெட்டிகளில் போடப்பட்டிருந்த மூவாயிரம் நூல்களைப் பகுப்பாக்கம், பட்டியலாக்கம் செய்து தட்டுகளில் வைத்து முழு நூலகமாக உரு வாக்கினேன்.

பின்னாளில் வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி முதல் புங்குடுதீவு வரை 12 கிளை நூலகங்களை உருவாக்கி நிர்வகித்த அனுபவம் மிக முக்கியமானது. அதன் பின்னர் 1983 காலகட்டத்தில் இடம்பெற்ற கலவரத்தின் காரணமாக கொழும்புடன் இணைக்கப்பட்டிருந்த புங்குடுதீவு சர்வோதய வளாகமானது துண்டாடப்பட்டு வடமாகாண சர்வோதயமாக மாற்றம் பெற்று தனித்தியங்கத் தலைப் பட்டது. இவ் வடமாகாண சர்வோதயமாக மாற்றம் பெற்ற காலகட்டத்தில் பொருளாதார வசதியீனங்களால் எங்களால் சம்பளமற்று வேலை செய்வதென்பது கடினமாக இருந்தது. அதன் காரணமாக 1985 டிசம்பர் மாதத்துடன் வருமானத் திற்காக வேறொரு வேலை தேட வேண்டியிருந்தது.

1985 இல் சர்வோதயகத்தில் இருந்து விலகிய ஒரு சில வாரங்களிலேயே திருநெல்வேலியில் பல்கலைக்கழக பின்வீதியில் அமைந்திருந்த Evelyn Rutnam Institute for Inter-cultural Studies என்ற ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தில் 01.01.1985 முதல் நூலகராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டியது.

தீவிரமான அரிய நூல் மற்றும் ஆவணச் சேகரிப் பாளரான கலாநிதி ஜேம்ஸ் இரத்தினத்தின் துணைவியார் இவ்லின் இரத்தினம் அவர்கள் மறைந்த பின்னர் அவரது ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் ஒரு பல்லினப் பண்பாட்டு நிறுவனத்தினை நூலக வசதியுடன் அமைத்து 10.05.1981 அன்று திறந்து வைத்தார். அந்நிறுவனம் திறக்கப்பட்டு சில நாட்களில் யாழ்ப்பாணப் பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டமை கலாநிதி ஜேம்ஸ் இரத்தினத்தின் மனதில் தாங்கொணாச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோகத்தை ஏற்படுத்தியிருந்தது. அதுவரை காலமும் தனது கொழும்பு 7 இல்லத்தில் சேகரித்து வைத்திருந்த அரிய நூல்கள் அனைத்தையும் தனது தாய்மண்ணுக்குக் கொண்டு வந்து சேர்த்த அவர் ஈவ்லின் இரத்தினம் நிறுவனத்தை ஒரு ஆராய்ச்சி நூலகமாக மாற்றியமைத்தார்.

இந் நூலகம் ஆரம்பித்த காலத்தில் பேராசிரியர் கா.இந்திரபாலா இந்த நிறுவனத்தின் இயக்குநராகவும், பின்னாளில் வீரகேசரியின் பிரதம ஆசிரியராக இருந்த சிவநேசச்செல்வன் நூலகராகவும் இருந்து பணியாற்றி வந்தார்கள். திரு.சிவநேசச்செல்வன் வீரகேசரியின் ஆசிரிய ராகப் பதவி பெற்றுச் செல்ல அவருடைய இடத்திற்கு நான் நியமனம் பெற்றேன். ஒரு வருடத்தில் கலாநிதி பேராசிரியர் இந்திரபாலாவும் அவுஸ்ரேலியாவிற்கு புலம்பெயர்ந்து போய் விட்டார். அதன் பின்னர் நிறுவனத்தின் முழுப் பொறுப்பும் எனது கைக்கு வந்தது.

இந்திய இராணுவத்தின் வருகையிலும் இந்நிறு வனத்தை கொண்டு நடத்த வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டிருந்தது. 1985 ஜனவரியிலிருந்து 1991 மே மாதம் வரை பொறுப்பேற்று நடத்தி வந்தேன். பின்னாளில் பொரு ளாதாரத் தடைச்சட்டம் காரணமாக குடும்பத்தினருடன் கொழும்புக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கொழும்பில் காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கட்டடத்தில் அமைந்திருந்த இந்து சமய கலாச்சார அமைச்சின் நூலகத்தினை புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் 1991 மே முதல் 1992 மார்ச் வரையில் அந்நூலகத்தினைப் புனரமைப்புச் செய்திருந்தேன். அப்புனரமைப்புப் பணி நிறைவடையும் வேளையில் "இனத்துவத்துக்கான சர்வதேச நிலையம்" (International Centre for Ethnic Studies) என்ற நிறுவன இயக்குநர் திரு. நீலன் திருச்செல்வம் அவர்கள் என்னை அழைத்து கொழும்பு 3 இல் கின்சி டெரஸ்ஸில் அமைந் திருந்த தங்களது நூலகத்தினைப் பொறுப்பேற்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தார். 01.03.1992 அன்று முதல் அந்நூலகத்தினைப் பொறுப்பேற்று சில காலம் ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகராகப் பணியாற்றி வந்தேன். பின்னர் வசதி ஏற்பட்ட வேளையில் 1992ம் ஆண்டு ஒக்டோபர் 04ஆம் திகதி குடும்பத்தினருடன் இங்கிலாந்திற்கு புலம்பெயர்ந்து சென்றோம். புலம்பெயர்ந்த பின்னர் என்னுடைய வாழ்க்கைத்தரம், நடைமுறை எல்லாம் முழுமையாக மாற்ற மடைந்தது. வாழ்வின் அடுத்த கட்டம் ஆரம்பித்தது.

நீங்கள் புலம்பெயர்ந்து வெளிநாடு செல்வதற்கு முன்னராக உங்களுடைய ஆரம்ப காலகட்டத்தில் நூலகவியல் துறையின் ஆரம்ப வளர்ச்சியில் பங்களிப்பு செய்திருக்கின்றீர்கள். அது தொடர் பாக சமகால விபரங்கள் பற்றி விரிவான விளக்கத்தை கொடுக்க முடியுமா?

ஆம். இது மிக முக்கியமானதொரு கேள்வி. இலங்கையில் வடபுலத்தில், தமிழ் நூலகர்களின் நூலக சேவை ஒரு துறையாக படிமுறை வளர்ச்சிபெறத் தொடங்கிய ஆரம்ப கால கட்டத்தில் நான் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருக்கின்றேன். இது சார்ந்த அனுபவத்தை வழங்க முடியும் என நினைக்கின்றேன்.

முதலாவதாக 1978இல் நூலகவியலை விரும்பி கல்வி கற்க ஆரம்பித்த காலத்தில் நூலகவியல் துறை பிரபலமான துறையாக இருக்கவில்லை. அந்நாட்களில் இத் துறைக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் உள்ளூராட்சி நூலகங்களில் பணியாற்றிய சிற்றூழியர்களே நூலக பாதுகாவலர்களாக தெரிவு செய்யப்பட்டனர். பெரும்பான்மையான நூலகங் களில் நூலக சிற்றூழியர்கள் நூலகர்களாக இருந்தார்கள். தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகளை எடுத்துக் கொண்டால், பாடசாலை அதிபரின் மகள் அல்லது அதிபருக்கு அணுக்க மான பழைய மாணவர்கள், உயர்தர வகுப்புகளில் கற்றும் பல்கலைக்கழக அனுமதியைப் பெறாதவர்கள் போன்றோரே நியமிக்கப்பட்டனர். இவர்கள் நூலகப் பராமரிப்பாளர் களாகவே தற்போது நாங்கள் கருதுகின்றோம்.

நான் கல்வி கற்ற காலத்தில் நூலகக் கல்வி விரிவான வகைப்புலத்தைக் கொண்டதாகவே அமைந்தது. அதாவது ஒரு நாட்டின் அறிவை வளர்த்தெடுக்கும், தந்திரோபாயத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் உள்ளீடு செய்வது நூலகரின் கடமை. தன் சேவைப் பிரதேசத்தின் வாசிப்புத் தரத்தை உயர்த்துவதில், அறிவுசார்ந்த நூல்களைத் தேடிக் கொடுப்பதில் நூலகரின் பங்கு முக்கியமானதாகும். மேலும், பாடசாலை மாணவர்கள் பாடசாலை நிறைவடைந்ததன் பின்னர் அவர்களது பொது வாசிப்புத் தேவையை ஈடுசெய்வதற்கான ஒரு நிலையமாக பாடசாலை நூலகம் இருந்திருக்கிறது. துரதிஷ்டவசமாக பாடசாலை முடிந்ததன் பின்னர் மாணவர்களுக்குக் கிட்டி யிருந்த அந்த இடைவெளியை தனியார் மேலதிகக் கல்வி நிலையங்கள் (ரியூசன் நிலையங்கள்) ஆக்கிரமித்துக் கொண்டதால் நூலகங்கள் வழங்கத் தயாராகவுள்ள சேவைகள் மூன்றாந் தரத்திற்கு தள்ளப்பட்டுள்ளன.

நாம் தமிழில் நூலகக் கல்வியைக் கற்கத் தொடங்கிய காலத்தில் இலங்கையில் தமிழில் நூலகவியல் சார்ந்த நூல்கள் இருக்கவில்லை. பயிற்சி பெறுவது தமிழ் மொழி மூலம் (medium) என்றாலும் ஆங்கிலத்திலுள்ள நூல்களை வாசித்து தமிழ் மூலம் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிலைமை இருந்தது.

இலங்கை நூலகச் சங்கத்தின் தமிழ்மொழிமூல வகுப்புகளை யாழ்ப்பாணத்தில் தொடங்குவதற்கு முன் நின்று உழைத்த கலாநிதி வே.இ.பாக்கியநாதன் அவர்கள் எங்களுடைய விரிவுரையாளராக இருந்தார். இவர் யாழ்ப் பாண நூலகத்தின் முதலாவது பட்டதாரி நூலகராக 1967ம் ஆண்டு பதவியேற்றவர். பின்னாளில் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் வர்த்தகத் துறையின் விரிவுரையாளராக இருந்தார். அவர் நூலகவியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற முதலாவது தமிழர். மிகவும் அறிவு பூர்வமான நூலகராக இருந் தார்.

மற்றைய விரிவுரையாளரான எஸ்.எம். கமால்தீன் கொழும்பு சாஹிராக் கல்லூரியின் ஆசிரியராக, இஸ்லாமிய அமைப்பின் (Islamic Centre) தலைவராக, இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையின் உபதலைவராக எனப் பல்வேறு பணிகளை ஆற்றிவந்தவர். இலங்கை தேசிய நூலக சபையின் உப தலைவராக எனப் பல்வேறு பதவிகளை வகித்த ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரும் எங்களது விரிவுரையாளராக இருந்தார்.

சு.ஞ.தம்பையா யாழ்ப்பாணக் கல்லூரியின் நூலகராக இருந்தார். பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் 70களில் ஆரம்பிக்கப்பட்ட போது, முதலாவது நூலகராகப் பதவி வகித்தவர். இவர்களே எனது முக்கிய விரிவுரையாளர்களாக இருந்தார்கள். இவர்களே எனது வழிகாட்டிகளாகவும் இருந்தார்கள். நாங்கள் நூலகவியல் துறை மாணவர்களாக அல்லாமல் நூலகவியல் துறை முன்னோடிகளாக மாற்றம் செய்யப்பட இவர்களே காரணமாக இருந்தனர்.

அக்காலத்தில் தமிழில் நூலகவியல் கல்வித்துறை இன்றுள்ளது போல பிரசித்திபெற்ற ஒன்றாக இருக்க வில்லை. இலங்கை நூலகச் சங்கம் மாத்திரமே நூலகக் கல்வியை முன்னெடுக்கும் நிறுவனமாக செயற்பட்டது. கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழககங்களில் அவ்வப் போது நூலகவியல் கல்வி போதிக்க முன்னெடுப்புகள் எடுக்கப்படுவதும் நிறுத்தப்படுவதமாக இருந்தன.

1970இல் திரு. எஸ்.எம்.கமால்தீன் “பாடசாலை நூலகர் கைநூல்” என்ற நூலை வெளியிட்டிருந்தார். இந்நூல் பாடசாலை நூல்களை எவ்வாறு ஒழுங்குபடுத்துவது என்பது தொடர்பாக பாடசாலை நூலகர்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருந்தது. இதைத் தவிர நூலகவியல் சார்ந்து வேறு நூல்கள் எதுவும் தமிழில் இலங்கையில் அந்நாட்களில் வெளிவந்திருக்கவில்லை. எனவே ஈழத்தின் தமிழ்மொழியில் முதலாவதாக வெளிவந்த நூலகவியல்துறைசார் நூலாக திரு. எஸ்.எம்.கமால்தீனின் “பாடசாலை நூலகர் கைநூல்” என்ற நூலைக் குறிப்பிடலாம்.

எதிர்காலத்தில் தமிழ்மொழி மூலம் கல்வி கற்க இருப்பவர்களின் நன்மை கருதி, தமிழ்நூல்களின் பற்றாக் குறையை இல்லாதொழிக்க வேண்டிய தேவை உணரப் பட்டது. தமிழில் இத்துறை சார்ந்த நூல்களை வெளியிட வேண்டும் என்ற எண்ணத்துடன் திரு வே.இ.பாக்கியநாதன் Dewey Decimal Classification என்ற பகுப்பாக்கத்திட்டத்தை தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து “நூல்பகுப்பாக்கம்” என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரிட்டு எனக்கு வழங்கினார். அதனை எனது அயோத்தி நூலக சேவைகள் என்ற அமைப்பின் வாயிலாக அந்நிறுவனத்தின் முதலாவது நூலகவியல் சார்ந்த நூலாக ஜூலை 1986இல் வெளியிட்டேன். அது மீண்டும் ஒகஸ்ட் 1989இல் மீள்பதிப்பையும் கண்டு எமக்கு நம்பிக்கையை வழங்கியது.

முதலாவது நூலை வெளியிட ஆயததங்களைச் செய்துகொண்டிருநத போது, எனது துணைவியாரின் இல்லமே எனது இல்லமாகவும்-வசிப்பிடமாகவும் இருந்தது. அந்த இல்லத்தின் பெயரே "அயோத்தி". இவ் வீட்டிலேயே முதன் முறையாக திரு வே.இ.பாக்கியநாதன், எஸ்.எம்.கமால்தீன் ஆகியோருடன் ஒன்றுகூடி எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஒரு திட்டத்தை வடிவமைத்திருந்தோம். நாங்கள் தமிழில் நூலகவியல் துறையை வளர்ப்பதற்கு முதலில் அதனை நிறுவனமயப்படுத்த வேண்டும் என்ற அறிவுரையை அவர்கள் எனக்கு வழங்கினார்கள். அதன் போது தான் 1985இல் "அயோத்தி நூலக சேவைகள்" என்ற நிறுவனத்தை உருவாக்குவதென்று தீர்மானித்தோம்.

அயோத்தி நூலக சேவைகள் எனும் எமது வெளியீட்டகத்தினால் முதலில் 1985இல் வெளியிடப்பட்ட நூலாக எனது மூத்த சகோதரரான வைத்திய கலாநிதி என்.சிவராஜா அவர்கள் எழுதிய "முதல் உதவி" என்ற நூல் அமைந்திருந்தது. இதனை ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு முழுவதையும் வெற்றிகரமாக சந்தைப்படுத்தினோம். அக்காலகட்டத்தில் விடுதலைப்போராளிகளின் கைகளில் இந்நூல் பிரபல்யமாகி இருந்தது. விரைவிலேயே அதன் மீள்பதிப்பும் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் தொடர்ச்சியாக அயோத்தி நூலக சேவைகள் இன்றளவில் நூலகவியல் சார்ந்தும், நூலியல் துறை சார்ந்தும் நூல்களை வெளியிட்டு வருகின்றது. இது என்னுடைய ஆரம்ப கால பணி எனக் குறிப்பிடலாம்.

நூலகவியல் கல்வி வளர்ச்சிடைய மற்றுமொரு முக்கிய பணியும் எமக்காகக் காத்திருந்தது. நூலக மாணவர்களுக்கு தேவையான ஓர துறைசார் சஞ்சிகையையும் வெளிக்கொண்டு வர வேண்டும் என எண்ணினோம். அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக "நூலகவியல்" என்ற பெயரில் செப்டெம்பர் 1985 இல் முதலாவது இதழை வெளியிட்டேன். காலாண்டு இதழாக இவ்விதழ் தடையின்றித் தொடர்ந்து கல்லச்சுப் பிரதியாக வெளியிடப்பட்டது. ஜூன் 1991ம் ஆண்டு வரை இச் சஞ்சிகை வெளிவந்தது. இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அனைத்து நூலகங்களுக்கும் இந்த நூலகவியல் சஞ்சிகை சென்றடைந்தது. இதற்கான மிக முக்கியமான பங்களிப்பை யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளராக இருந்த திரு. சுந்தரம் டிவகலாலா (தற்போது ஆளுநரின் தனிப்பட்ட செயலாளராகப் பணி யாற்றிக் கொண்டிருக்கின்றார்) உறுதுணையாக இருந்தார். தனது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பொது நூலகங் களுக்கும், சனசமூக நிலைய நூலகங்களுக்கும் "நூலகவியல்" பிரதிகள் சென்றடைய வேண்டும் என சுற்றறிக்கை கூட வெளியிட்டிருந்தார். இத்தகைய உதவிகளுடன் நூலகவியல் சஞ்சிகை திறம்பட வெளிவந்தது. இச்சஞ்சிகைக்கு ஏராள மான நூலகவியல்துறை தமிழ் விரிவுரையாளர்கள் கட்டுரை வடிவில் தமது அறிவை இச்சஞ்சிகை வாயிலாக பரப்பி வந்தார்கள். நான் புலம்பெயர்ந்து லண்டன் வந்த பின்பும் ஜனவரி 2006இலும், ஏப்ரல் 2006இலும் ஏழாவது தொகுதி யின் இரண்டு இதழ்களை அச்சிட்டு வெளியிட்டேன். துர்அதிர்ஷ்டவசமாக அதற்காக கட்டுரைகளை எழுதுவதில் எம்மவர்கள் அக்கறை காட்டாத நிலையில் நூலகவியல் இதழ்களைத் தொடர முன்வரவில்லை. துர்அதிர்ஷ்டம் என்னவென்றால் இன்று வரை எவரும் தமிழில் நூலகவியல் துறைக்கான சஞ்சிகையொன்றினை வெளியிட முன்வராத நிலையில் நூலகவியல் சஞ்சிகை விட்டுச்சென்ற இடம் வெறுமையாகவே காணப்படுகின்றது.

நூலகவியலில் வெளிவந்த படைப்பாளிகளின் கட்டுரைகள் காலக்கிரமத்தில் தொகுக்கப்பட்டு தனித்தனி நூல்களாகவும் வெளியிடப்பட்டன. இவ்வாறு நூலகவி யலில் துறையில் ஆரம்பகால நூல்களை வெளியிட்ட பெருமை அயோத்தி நூலக சேவை என்ற எனது நிறுவனத் திற்குரியதாக இருந்தது. தற்போது ஏராளமான நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் வெளிவருவதற்கு முன்னோடியாக இவ் அமைப்பு இருந்து வந்துள்ளதது.

நூலகவியல் சஞ்சிகையைத் தவிர இன்னுமொரு முயற்சியையும், அதாவது நூலகவியல் கருத்தரங்குகளையும் நாம் ஒழுங்கு செய்தோம்.

தோட்டப் பிரதேசங்களுக்கான கூட்டுச் செயலகத்தின் அழைப்பின்பேரில் (Coordinating Secretariat for Plantation Areas, Kandy) கண்டி, புஷ்பதான மாவத்தையில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் 1990 ஏப்ரல் 6-8ம் திகதிகளில் மலையக நூலக அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கொன்று அயோத்தி நூலக சேவைகளினால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. இலங்கையின் பிரபல நூலகர்களை இக்கருத்தரங்கில் ஒரே மேடையில் இடம்பெறச்செய்தமை இந்நிகழ்வின் முக்கிய வெற்றியாகும்.

திருகோணமலை மாநகர சபையினூடாக திருக்கோணமலை நூலகத்தில் மூன்று நாள் நூலகவியல் சார்ந்த கருத்தரங்கை நடாத்தினோம். S.M.கமால்தீன், வே.ஈ.பாக்கியநாதன் போன்றோர் இக் கருத்தரங்கிற்காக சொந்தச் செலவில் வந்திருந்தார்கள். அவர்கள் கருத் தரங்கை நடத்தி திருக்கோணமலை மாவட்ட நூலக ஊழியர் களிடையே நூலகவியல் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத் தினார்கள். அதன் வழியாக புதிய மாணவர்கள் நூலகவியல் துறைக்கு சேர்ந்து இன்று ஏராளமானோர் இத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ளனர். திருக்கோணமலை, மட்டக் களப்பு, கண்டி, யாழ்ப்பாணம் என பல்வேறு இடங்களில் கருத்தரங்குகளை நடாத்தியிருந்தோம். இதுவொரு மிக முக்கியமான மறுமலர்ச்சிக் காலமாக 1986களின் இறுதிப் பகுதியில் இருந்து 1990இன் ஆரம்ப கட்டம் வரை பல கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தியிருந்தோம்.

தற்பொழுது நீங்கள் புகழ்பெற்ற நூலகவியலாளராகத் திகழ்ந்து வருகின்றீர்கள். நூலகவியல் துறையின் ஆரம்ப காலத்தில் நீங்கள் உள்வாங்கப்பட்டவர்கள் என்ற வகையில் அதிக சவால்களை கடந்து வந்திருப்பீர்கள். அந்தவகையில் நூலகராக இந்த சமூகம் உங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு உள்வாங்கியது. அதனைப் பற்றி குறிப்பிட முடியுமா?

இதுவொரு மிக முக்கியமான கேள்வி. சமூக நோக்கில் நூலகர்களை இன்றும் இச் சமூகம் மதிப்பதில்லை. நாற்பது வருடங்களுக்கு முன்னர் எப்படி மதித்திருப்பார்கள் என்பதற்கு அதிக உதாரணங்களைக் குறிப்பிடலாம். முதலாவதாக நூலகவியலில் Foundation தரத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அவ்வேளையில் சக மாணவர்கள் பலரும் நூலகங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். என்னை யொத்த ஒன்றிரண்டு மாணவர்களே அதுவரை நூலகங்களில் பணியாற்றி அனுபவமற்றவர்களாக இருந்தோம். எமக்கு விரிவுரையாளராக இருந்த திரு. வே.இ.பாக்கியநாதன் அவர்கள் நூலகங்களில் தொண்டர் அடிப்படையிலாவது வேலைகளை எமக்குப் பெற்றுத் தருவதில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டுவந்தார்.

ஆரம்ப காலத்தில் நூலகவியலில் தற்காலிக வேலை களைப் பெறும்போது முழுமையான சம்பளத்தினை எதிர்பார்க்க முடியாது. இதில் முழுமையான பயிற்சியை நிறைவு செய்யாமலோ, அத்துறையில் முன்னனுபவங்களை பெற்றிராமலோ, அதனை எதிர்பார்க்க முடியாது. திடீரென ஓர் நாள் வகுப்பறையில் வைத்து "இராமநாதன் கல்லூரியில் ஒரு நூலகர் பதவி இருக்கின்றது. யாருக்காவது விருப்பமா" என்று கேட்டார். எமது டிப்ளோமா கற்கையில் சிறிதளவு எண்ணிக்கையானோரே வேலையற்று இருந்தமையால் நான் அவ் வேலைக்கு செல்வதற்கு எனது விருப்பத்தினைத் தெரிவித்தேன். நான் ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து கல்வித் திணைக்களத் தலைவரைச் சந்திக்கும் படி கூறினார்.

எங்களுடைய டிப்ளோமாக் கற்கை சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலேயே இடம்பெற்றது. நான் திங்கட் கிழமையளவில் கல்வித் திணைக்களத் தலைவரைச் சந்திக்க சென்று காத்திருந்தேன். அவருடைய அறை வாசலில் இருந்த போது கல்வித் திணைக்களத் தலைவர் என்னை கை காட்டி அழைத்தார். அவரைச் சந்தித்த போது எனக்கு ஏற்கனவே அவரைச் சந்தித்தது போன்ற உணர்வு இருந்தது. அவரும் என்னிடம் "ஓவசியர் நடராஜாவின் மகன் தானே" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டார். எனக்கு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. எவ்வாறு என்னுடைய அப்பாவை அறிந்திருந்தார் என எனக்கும் அதிர்ச்சியாக இருந்தது. எனது தந்தையார் 1970ம் ஆண்டிலேயே நீர்கொழும்பில் காலமாகி விட்டார். யாழ்ப்பாணத்தில் அவருக்கு யாருடனும் அறிமுகம் என்பதும் குறைவு. நீர்கொழும்பில் தனது 19வது வயதில் இருந்து 59வது வயது வரை வாழ்ந்தவர். பின்னர் அவர் எங்களுடைய முன் வீட்டில் வசித்ததை அவர் நினைவு படுத்தியன் மூலம் அறிந்து கொண்டேன். நான் அவருடைய பரிமளா, சுசீலா அகிய இரு பிள்ளைகளுடன் இணைந்து விளையாடியதையும் எனக்கு நினைவு படுத்தினார். பின்னர் வந்த விபரத்தைக் கூறும்படி என்னைக் கேட்டார். இராமநாதன் மகளிர் கல்லூரி நுலகத்திலிருந்து வேலை வெற்றிடத்திற்கான அனுமதி பெற வந்திருப்பதைத் தெரிவித்தேன். அவர் உடனேயே எனக்கான அனுமதிக் கடிதத்தினையும் தந்து அனுப்பி வைத்தார்.

மறுநாள் 24.05.1978 அன்று இராமநாதன் மகளிர் கல்லூரியின் நூலகராகப் பதவியேற்றேன். பாடசாலை நூலகருக்கான சம்பளம் Facilities Fees இலேயே வழங்கப் பட்டது. அப்பொழுது அதற்கான மாத சம்பளம் 125 ரூபாய் மட்டுமே. அங்கு பியோனாக பணியாற்றியருக்கு அவ்வேளை யில் 400 ரூபா மாதச் சம்பளம் வழங்கப்பட்டது. அதன் மூலம் எங்களுடைய மதிப்பு எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

24.05.1978 அன்று அனுமதிக் கடிதத்துடன் இராம நாதன் மகளிர் கல்லூரிக்கு கல்லூரி அதிபரை சந்திப்பதற் காகச் சென்றிருந்தேன். அக்கடிதத்தினைப் பார்த்துவிட்டு கல்வித் திணைக்களத் தலைவருக்கு அதிபர் என் முன்னிலையிலேயே தொலைபேசி அழைப்பினை எடுத்தார். "நீங்கள் பிழையான ஒருவரை அனுப்பியிருக்கிறீர்கள். பெண்கள் படிக்கும் பள்ளிக்கூடத்திற்கு 24 வயது நிரம்பிய இளைஞனை அனுப்பியிருக்கின்றீர்கள்" என்று கல்வித் திணைக்களத் தலைவரிடம் தனது உடனடி எதிர்ப்பினை அவர் வெளியிட்டார். அதற்கு கல்வித் திணைக்களத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் பொருத்தமான ஒருவரையே தெரிவு செய்திருப்ப தாகவும், என்னையே அப்பதவிக்கு நியமிக்கும்படியும் கூறினார். இவ்வாறு ஒரு விரும்பத்தகாத சூழ்நிலையிலேயே நான் வேண்டா விருந்தாளியாக அப் பாடசாலைக்குள் பணியாற்ற நுழைந்தேன்.

இப் பாடசாலையில் பணியாற்றிய ஒரு வருட காலத்திலேயே (24.05.1978-30.04.1979) பல அனுபவங்கள் கிடைத்திருந்தன. இந் நூலகத்திலிருந்த நூல்கள் பல கோணிச்சாக்குகளில் இடப்பட்டு பதிவேதுமின்றிக் கிடந்தன. உசாத்துணை நூல்கள் இருந்த இடங்கள் இடைக் கிடையே வெற்றிடமாக காணப்பட்டன. ஒரு நூலகர் இன்றி பலகாலம் அப்பாடசாலை நூலகம் கைவிடப்பட்டிருந் தமைக்கான அனைத்து அடையாளங்களும் காணப்பட்டன. சில ஜன்னல்கள் முழுமையாக மூடப்படாதிருந்ததால் செம்பாட்டு மண் புழுதி அலுமாரிகளில் மூடப்பட்டிருந்த நூல்களிலும் படிந்து கிடந்தன. முதல் வேலையாக அனைத்து புத்தகங்களையும் படிப்படியாக துடைத்தேன். அன்று என்னுடைய வசதிக்காக நிலத்தில் அமர்ந்திருந்தே இப் புத்தகங்களை துடைத்தேன். இதற்கெல்லாம் நூலக சேவையின் மீது இயல்பாகக் கொண்டிருந்த ஆர்வமே காரணமாக அமைந்தது என்று இன்று எண்ணுகின்றேன். 125 ரூபாயை விட கூடுதலான சம்பளமெடுக்கும் பிறிதொரு தொழிலுக்கு செல்லக்கூடிய வாய்ப்பிருந்தும் இதனை சவாலாக ஏற்றுக் கொண்டு நான் இவ் வேலையைச் செய்தேன்.

ஒரு நாள் நூலகத்தில் வந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவருக்கு கொஞ்சம் அருகாமை யில் கீழிருந்து புத்தகங்களை துடைத்து அடுக்கிக் கொண்டி ருந்தேன். நீண்டநேரம் என்னை பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்த அவர் என்னை ஆதரவுடன் விசாரித்தார். என்னுடைய அண்ணா என்ன செய்கின்றார் என்று கேட்டார். அதற்கு நான் அவர் வைத்தியராக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுவதைக் குறிப் பிட்டேன். மற்றைய அண்ணாவின் தொழில் பற்றியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரித்தார். அவர் நிலஅளவையாளராக பணியாற்றுவதை யும் குறிப்பிட்டேன். "உமது அண்ணாமார் வைத்தியராகவும், நிலஅளவையாளராகவும் கௌரவமான வேலைகளில் இருக்கையில் எதற்காக நீர் இந்த தூசுதட்டும் வேலையை செய்ய வேண்டும்?" என்று கேட்டார். "ஏன் இந்த வேலை யைச் செய்யக்கூடாதா?" என்று நான் திருப்பிக் கேட்டேன். அதற்கு அவர் இதனை விட நல்ல வேலை பார்க்கலாமே என்று சொன்னார்.

இக் கருத்தே அக் காலத்து சமூகத்தின் கருத்தாகவும் இருந்தது. நூலகவியல் துறை என்பது படித்தவர்கள் செய்யும் தொழிலாக ஏற்றுக்கொள்ளவது கடினமாக இருந்தது. அதற்குக் காரணம் அக்காலத்தில் பொது நூலகப் பணிகளில் ஈடுபட்டு வந்த சிற்றூழியர்களே.

ஆனால் இன்று நூலகரின் பணி என்பது சர்வதேச மட்டத்தில் உயர்தரத்தில் உள்ளது. பல்கலைக்கழகங்களின் பரிசளிப்பு விழாவில் துணைவேந்தருக்கு பின்னால் செல்லும் அணியில் முதலாவதாக பேராசிரியர்களுடன் இணையாக பல்கலைக்கழக நூலகர் அங்கம் வகிப்பதை அவதானிக்க லாம். இன்று பொது நூலகப் பணியாற்றும் நூலகர்கள் அனைவரும் நூலகவியல்துறையின் டிப்ளோமா கல்வியை தொடர்ந்திருக்கவேண்டும் என்ற கட்டாயமுள்ளது.

நூலகரின் பணிகளாவன அப்பிரதேசம் சார்ந்த அறிவுத் தேட்டத்தைப் பாதுகாப்பது, அடுத்த தலைமுறைக்கு வழங்குதற்கான வளங்களை சேகரிப்பது இன்றைய தலை முறைகளுக்கான அறிவைச் சுட்டிக் காட்டுவது போன்ற வற்றை உள்ளடக்குகின்றன. ஒரு நூலகர் சிறந்த அனுபவம் உள்ளவராகவும், நல்லதொரு வாசகராகவும் இருந்தால் தான் நூலகத்தினைத் நிர்வகிக்கமுடியும். புத்தகம் வாசிக்கும் ஆர்வம் அற்ற பலர் இன்று நூலகர்களாக இருப்பத னாலேயே வாசிப்பு குறைவடைந்து செல்கின்றது. இவை ஆரம்ப காலத்தில் எங்களுக்கான சவால்களாக இருந்தன.

இதில் குறிப்பிட விரும்பும் மற்றொரு விடயம் என்னவெனில் இலங்கையில் மட்டுமே சனசமூக நிலையங் கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இச் சனசமூக நிலையங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகச் செழுமையாக வளர்ச்சியடைந்த ஒரு அமைப்பாக இருந்தது. 1960, 1970களில் மிக நல்ல நிலையில் சனசமூக நிலைய நூலகங்களின் வளர்ச்சி அமைந்திருந்தது. இவற்றில் பல சமூக நிலையங்கள் கிராம மட்டத்தில் ஒரு பொது நூலகத்தின் பணியை மிகத் திறம்பட ஆற்றிவந்துள்ளன.

பல சனசமூக நிலையங்கள் பத்திரிகைகள் சஞ்சிகை களை வாசிக்கும் வாசகசாலையாக அமைந்திருந்தது. சில சமூக நிலையங்கள் நூலக சேவையையும் சேர்த்து ஆற்றி வந்துள்ளன. யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் 1936ம் ஆண்டு க.மு.செல்லப்பா அவர்கள் நூலகத்தினை உருவாக்கிய போது தனது வீட்டில் கொட்டில் ஒன்றைக் கட்டி அதில் நூல்கள், பத்திரிகைகளை அடுக்கி வைத்து ஊர் மக்களுடைய பாவனைக்கு விட்டிருந் தார் என வரலாறு சொல்கின்றது. அதுவொரு சனசமூக நிலையத்தின் உருவாக்க அடித்தளமே ஆகும். பின்னர் அதனை யாழ்ப்பாண நகரசபையிடம் கொடுத்த பின்னர் பொதுசன நூலகமாகப் பரிமாற்றம் கண்டது. சனசமூக நிலையங்கள் காணப்பட்ட காலத்தில் கொட்டடியில் வடமாகாண சனசமூக நிலையங்களின் சம்மேளனம் ஒன்று காணப்பட்டது. இவ் அமைப்பு வடமாகாணத்தில் இருந்த 338 சனசமூக நிலையங்களின் வலையமைப்பைக் கட்டுப் படுத்தும் அமைப்பாக இருந்தது. இச் சனசமூக நிலைய சம்மேளனங்களுக்கு ஊடாகவே வடமாகாணத்தின் அனைத்து சனசமூக நிலையங்களுக்கும் நூல்களை விநியோகித்து இரவல் கொடுத்து திருப்பி எடுக்கும் நூல் வங்கித் திட்டம் காணப் பட்டிருந்தது. இத் திட்டத்தை என்னுடன் இணைந்து நடைமுறைப்படுத்திய ஒருவர் இன்றும் வாழ்கின்றார். அவர் மில்க்வைற் அதிபர் கனகராசாவின் பெறாமகன் தவகோபால் ஆவார். இவரும் நானும் இணைந்து இத்திட்டத்தை செய்திருந்தோம். துரதிஷ்டவசமாக 1983 கலவரம் மற்றும் போர்க்கால நடை முறைகளால் சனசமூகக் கட்டமைப்பு உடைந்துபோனது. சனசமூக நிலையங்களிற்கு செல்வதற்கே அச்சப்படும் நிலை ஒர கட்டத்தில் ஏற்பட்டது. ஆரம்பகால சனசமூக நிலைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத் திட்டம் மீண்டும் இப் பகுதிக்கு வரவேண்டும் என்பதில் மிகவும் அக்கறையாக உள்ளேன்.

இதுவரையில் நூலகவியலாளர் துறையின் ஆரம்பகால வளர்ச்சி, சவால்கள் பற்றிப் பார்த்தோம். இரண்டாம் கட்டமாக புலம்பெயர் வாழ்வு, அதன் ஆரம்ப காலம், அங்கு மேற்கொண்ட பணிகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

என்னுடைய சமூக சேவையின் பெரும்பகுதி புலம்பெயர்வாழ்விலேயே தொடர்ந்தது. இங்கு வசித்த போது ஆரம்ப கட்டத்தில் பத்திரிகைகளுக்கு கட்டுரைகளை எழுதி அனுப்பினேன். சில நூல்களை எழுதி வெளி யிட்டிருந்தேன். கிராம நூலகங்களும் அபிவிருத்தியும், ஆரம்ப நூலகர் கைநூல் போன்ற நூல்களை இலங்கையி லிருந்த போதே எழுதி வெளியிட்டேன். 1992 இல் லண்டனுக்கு புலம்பெயர்ந்த போது அங்குள்ள நூலகவியல் துறையில் சிறிது காலம் ஈடுபாடு காட்டினேன். அங்கு நூலகர்களின் பங்களிப்பு இங்கு இருப்பது போன்றதல்ல. நூலகர்கள் என்பது அறிவியலின் உச்சத்தை எட்டியவர் களாகக் காணப்பட்டனர். மின் கணனி இயந்திரங்களே அன்றாட நூலக சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுவந்தன. அவர்களுடன் போட்டி போட்டு நூலகங்களில் நூலகர் களாக பணிபுரியும் வாய்ப்பு என்னளவில் உசிதமாக இருக்க வில்லை.

இவ்வேளையில் புலம்பெயர்ந்த சிறிது காலத்தில் பிரித்தானிய ரோயல் மெயில் (Royal Mail) தபால் திணைக் களத்தில் எழுதுவினைஞராக (Processing Clerk) பணியாற்ற வாய்ப்புக் கிட்டியது. 1994 அல்லது 1995 கால கட்டத்தில் ஒருவருட காலத்திற்கு தகுதிகாண் நிலையிலிருந்தபின் ஓயவூதிய வசதிகளுடனான இவ் அரச பதவி எனக்குக் கிடைத்தது. துரிதமாக வளர்ச்சியடைந்து இத்துறைக்குள் நன்றாக உள்வாங்கப்பட்டேன். பிரித்தானிய ரோயல் மெயிலிற்கு கீழ் வருகின்ற Post Office Limited என்ற உப அமைப்பு இருந்தது. அவர்கள் தங்களின் கட்டுப்பாட்டில் இருந்த 23000 தபால் அலுவலகங்களுக்குத் தேவையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தை நாளாந்தம் அனுப்புவது, முத்திரைகளை அனுப்புவது, ஓய்வூதியம் வழங்குவது, உதவிப்பணம் வழங்குவது, பசும் பாலிற்கான வவுச்சர்கள் வழங்குவது, முதியோருக்கான பராமரிப்புக் கொடுப்பனவு என பல வேலைகளை கிராம மட்டத்தில் செய்தனர். அதற்கான அனைத்து பணிகளையும் Post Office Limited செய்தது.

பிரித்தானியாவில் காணப்படும் 23000 தபால் நிலையங்களுக்கான பணத்தை பாதுகாப்பாக விநியோகிக் கும் பாரிய பணியினை ரோயல் மெயிலின் ஒரு சிறு அங்கமான CHD (Cash Handling and Distribution) செய்துவந்தது. இப்பிரிவிலேயே நீண்டகாலம் நான் பணியாற்றினேன். இளைப்பாறும் வேளையில் அதன் விநியோக மையமான R and D என்ற Receipt and Despatch பிரிவின் பொறுப்பதி காரியாக பணியாற்றியிருந்தேன். இப்பிரிவின் முக்கிய பணி களாக தபால் நிலையங்களுக்கான பணத்தை அனுப்புவது, வெளிநாட்டு நாணயங்களை அனுப்புவது, தபாலகங்கள் தரும் பணத்தை மீளப்பாதுகாப்பாகக் கொண்டுவந்து எமது நிலையத்தில் சேர்ப்பது போன்றன காணப்பட்டன. இதில் என்னுடைய பணியானது Cash Handling and Distribution அதிகாரியாக பணியாற்றுவதாக இருந்தது.

கடந்த மார்ச் மாதம் 2017 இல் இருபது வருட சேவையின் பின்னர் அவ் வேலையிலிருந்து ஓய்வு பெற்றேன். அதுவரையிலும் நான் பிரித்தானியாவில் எங்குமே நூலகராகப் பணியாற்றவில்லை. ஆனால் 2017 இல் பிரித்தானியாவின் நூலக அமைப்பினது நூலகச் சங்கத்தின் (British Library Association) CILIB வலையமைப்பினால் கௌரவ விருதொன்று (IPRA Award) எனக்கு வழங்கப்பட்டது. பிரித்தானியாவன் சிறந்த நூலகர்கள் மூன்று பேருக்கு இவ் விருது வழங்கப்பட்டது. இதில நான் சிறப்பு விருதாளனாகத் தெரிவு செய்யப் பட்டேன். அவ் விருது வழங்கப்பட்ட முதல் ஆசிய நாட்டவர், முதல் இலங்கையர், முதல் தமிழன் நான் என்பதைக் குறிப்பிட வேண்டும். இவ்விருது வழங்கப் படக் காரணம் என்னவென்று அந்த நிறுவனம் தெரிவிக்கையில், "தொழில்ரீதியில் பிரித்தானியாவில் நூலகராக இல்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனாலும்கூட தன் வாழ்நாளின் பெரும்பகுதியை நூலகத் துறைக்காக, குறிப்பாக, தாய் நாட்டில் நூலகங்களுக்கு நூல்களை ஆயிரக்கணக்கில் தனிமனித நிறுவனமாக இயங்கிப் பெற்றுக்கொடுப்பதின் மூலம் தனது தாயகத்தின் நூலக சேவையினை வளர்த்தெடுக்க பிரதிபலன் கருதாமல் நீண்டகாலம் பணியாற்றி வருவதால் எனக்கு இந்த சிறப்பு விருது வழங்கப்படுகின்றது என்றும், பிரித்தானிய நூலகர்களும் இதனை முன்னோடியாக எடுத்து சமூக உணர்வுடன் செயற்பட வேண்டும்" என்றும் குறிப் பிட்டிருந்தார்கள்.

நூலகவியல் துறையில் நேரடியாக இந்நாட்டில் பணியாற்றாத போதிலும் நூலகவியல் சார்ந்து கடந்த இருபது வருட காலமும் பணியாற்றினேன். அப்பணிகளை ஒவ்வொன்றாகக் குறிப்பிடலாம்.

முதலாவதாக, இலங்கையிலுள்ள நூலகங்களுக்கு Books Abroad என்ற நிறுவனத்தின் மூலமாக பிரித்தானிய பாடசாலை நூலகங்களிலுள்ள மேலதிக நூல்களைப் பெற்று வழங்கியமையாகும். இங்கு ஒரு தகவலை குறிப்பிட வேண்டும். பிரித்தானியப் பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்பறையிலும் ஒவ்வொரு நூலகம் காணப்படும். அதனைவிட முழு பாடசாலைக்கும் ஒரு பெரிய நூலகம் காணப்படும். வாசிப்பு என்பது இந்நாட்டுப் பாடசாலை களில் அன்றாட நிகழ்வாகக் கொள்ளப் படுகிறது. அதனாலேயே இன்றைய நவீனத்துவமான கால கட்டத்திலும் புத்தக வாசிப்பு கலாச்சாரம் நலிவடையாமல் மேலோங்கியிருக்க இதுவே காரணமாகும். பெரம்பாலான சிறுவர் பாடசாலை வகுப்பறை நூலகங்களின் நூல்கள் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை மாற்றப்படும். பாவிக்கப் பட்டாலும் அல்லது பாவிக்கப்படாது விட்டாலும் அந்த நூல்களை களைந்து புது நூல்களை வழங்குவார்கள். இப் பழைய நூல்களை எடுத்து பெரும் வீதிகள் (Highway) அமைக்கும் போது தாருடன் இணைத்து குழம்பாக்கி வீதிக்குப் போடுவார்கள். சிலவேளைகளில் டுயனெகடைட எனப்படும் நிலங்களை மேடாக்கி சமதளமாக்கும் வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் புதைப்பார்கள். இவ்வாறு அநியாயமாக அறிவு சார்ந்த நூல்கள் அழிவதைத் தடுத்து அதில் நல்ல நூல்களைத் தேர்ந்து மீள்சுழற்சிமுறையில் ஆபிரிக்க ஆசிய நாடுகளின் பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கும் பணியினை Books Abroad என்ற தொண்டர் நிறுவனம் நீண்ட காலமாக தொண்டடிப்படையில் மேற்கொள்கின்றது. இங்கே சேவையாற்றும் சுமார் முப்பது தொண்டர்களும் பல்வேறு பாடசாலைகளிலும் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்கள் அல்லது பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள். அவர்கள் பாடசாலை நூல்கள் வெளியேற்றப்படும் வேளைகளில் வாகனங்களைக் கொண்டு சென்று அவற்றை ஏற்றி கொண்டு ஹண்ட்லி (Scotland) எனும் இடத்தில் உள்ள றயசநாழரளந இல் சேமிப்பார்கள். பாடசாலை நிறைவுற்றதன் பின்னர் ஓய்வு வேளைகளில் தொண்டர்கள் இணைந்து அவற்றைத் தரம் பிரிப்பார்கள். பழுதடைந்த புத்தகங்களை மீள்சுழற்சிக்கு வழங்குவார்கள்.

அதே வேளை பிரித்தானிய பதிப்பகங்கள், நூல்களை மறுபதிப்பு செய்கின்றபோது முன்னைய பதிப்பகளையும் இவர்களிடம் வருடாந்தம் வழங்குவார்கள். இந்தவகையில் இவர்களுக்கு கிடைக்கும் ஏராளமான நூல்களைத் அந்தந்த வகுப்புக்களுக்கு ஏற்ப தரம் பிரிப்பது அவர்களது வேலை யாக அமையும். அந்தந்த வகுப்புக்களுக்கான நூல்களைக் கேட்கும் வெளிநாடுகளுக்கு, குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளான ஆபிரிக்க, ஆசிய நாடுகளுக்கு தமது சொந்த செலவில் கப்பல் மார்க்கமாக நூல்களை கொண்டெய்னர் களில் இந்நிறுவனம் அனுப்புகின்றது.

இலங்கைக்கு அந் நாட்களில் ஒரு நிறுவனத்திற்கு மாத்திரம் அனுப்பி வந்தார்கள். 2006ம் ஆண்டில் மறவன் புலவ சச்சிதானந்தன் அவர்களின் ஆதரவுடன், சீவகதாஸ் அவர்கள் நடத்திவந்த அறவழிப் போராட்டக் குழு (சாவகச்சேரியில் அமைவு பெற்றிருந்தது) நடத்திய நூலகத்திற்கு வழங்கினார்கள். Books Abroad நிறுவனத்தை அறிந்து நான் அவர்களுடன் தொடர்பு கொண்டபோது "இலங்கையில் சாவகச்சேரி என்ற இடத்தில் புத்தகங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில ஆண்டுகளாக தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் புத்தகங்கள் கிடைக்கப்பெறுவது தொடர்பாக எவ்வித தகவல்களும் எமக்குக் கிடைக்க வில்லை. இலங்கைக்கு செல்லும் வேளையில் அது தொடர்பாக தகவலறிந்து தரும்படி" கேட்டிருந்தார்கள். நான் 2006ம் ஆண்டு இலங்கை வந்தபோது அறவழிப் போராட்டக் குழுவுக்குரிய அலுவலகம் இராணுவ கட்டுப்பாட்டுக்குரிய பகுதியாக இருந்தது. இங்கு எவரும் இருக்கவில்லை. இதனை அறிந்து நான் Books Abroad நிறுவனத்திற்கு அறிவித்திருந்தேன். அதன் பின்னர் அறவழிப் போராட்டக் குழுவினருக்கு புத்தகம் அனுப்பும் வேலைத்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்த அந்நிறுவனம் தீர்மானித்தது.

இருப்பினும் இலங்கையின் வட கிழக்குப் பிரதேசங்களின் பாடசாலை நூலகங்களுக்கு இப் புத்தகங்கள் பயனுடையதாக அமையும் என்பதால் அப் பொறுப்பை நான் ஏற்றுச் செய்வதாக அவர்களுக்கு வாக்குறுதி வழங்கினேன். அதன் பின்னர் வடக்கு கிழக்குக்கான நூல் விநியொகத்தை நான் பொறுப்பேற்று அப்பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு இவர்களுடைய வேலைத் திட்டத்தை அமுல் படுத்தத் தொடங்கினேன். கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் நூல்களை வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு அன்று தொடக்கம் இன்று வரை நூல்களை அனுப்பி வருகின்றேன். நேற்றுக் கூட புங்குடுதீவு சர்வோதய அமைப்பிற்கு சிறுவர் நூலகமொன்றை உருவாக்கும் பொறுப்பில் 2000 நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

புகலிடத்தில் வாழும்வேளையில் மிக முக்கியமான எனது மற்றுமொரு பணி "நூல் தேட்டம்" நூற்பட்டியல் தொகுதிகளை வெளியிடத் தொடங்கியமையாகும். புலம் பெயராது இலங்கையிலேயே இருந்திருந்தால் பொரளாதார காரணிகளால் இது நடைமுறையில் சாத்தியப்பட்டிருக்காது என்று நினைக்கின்றேன். நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி லண்டனில் 2002 இல் வெளியிடப்பட்டது. இதில் இலங்கையில் வெளியான 1000 நூல்களும் அந் நூல்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய குறிப்புக்களும் இடம் பெற்றிருந்தன. இரண்டாவது தொகுதி மேலும் ஒரு 1000 நூல்கள் தொடர்பான குறிப்புக்களுடன் 2004இல் வெளிவந்தது. இவற்றில் நூலியல் விபரம், நூல் பற்றிய குறிப்பு, ஆசிரியர், அந்நூலிற்கு ஏதாவது விருது கிடைத்திருப்பின் அதனையும் உள்ளடக்கி வெளியிட்டிருந்தேன். இவ்வாறாக மூன்று, நான்கு தொகுதி என தொடர்ந்து வெளிவந்தது. 2018ம் ஆண்டு பன்னிரண்டாவது தொகுதி வெளி வந்திருக்கின்றது. இப்பொழுது பதின் மூன்றாவது தொகுதி அச்சில் இருக்கின்றது. மொத்தம் 13000 நூல்களை சகல துறைகளிலும் தமிழில் வெளிவந்த ஈழத் தமிழர்களின் நூல்களை ஆவணப்படுத்தி வைத்திருக் கின்றேன். இந்தப் பதின்மூன்று தொகுதிகளின் வாயிலாக ஈழத்தமிழர்கள் இதுவரை வெளியிட்ட 13000 நூல்களைப் பார்வையிடக் கூடியதாக உள்ளது. இதுவரை காலமும் இலங்கை மட்டுமல்ல இந்தியாவில் கூட "நூல்தேட்டம்" போன்று விரிவானதொரு ஆவணப்படுத்தப்பட்ட திட்டம் இல்லை. இது உண்மையில் ஒரு நாட்டின் தேசிய நூலகம் செய்ய வேண்டிய பணியாகும். தமிழ் நூல்களைப் பதிவு செய்வதற்கான அக்கறை இலங்கை தேசிய நூலகத்திற்கு இன்மையே இதற்கான காரணமாக உள்ளது. அதனால் நாங்களே இதனை ஈழத்து தமிழ் தேசிய நூற்பட்டியலாக எதிர்காலத்தில் கருதக் கூடிய வகையில் இதனை என்னுடைய வாழ்நாளில் முடிந்தவரை தொடரத் தீர்மானித்தேன். 2002 இலிருந்து நான் இதனை மேற்கொள்கின்றேன். என்னுடைய வாழ்நாள் காலத்தில் இருபது தொகுதிகளையாவது வெளியிட வேண்டும் என்ற இலக்கை வைத்துள்ளேன். இந்த அக்கறையிலேயே ஒவ்வொரு வருடமும் இலங்கை வந்து எழுத்தாளர்களிடம் நூல்களைப் பெற்று அங்கு வைத்துப் பதிவு செய்வதுமாக எனது வேலைத்திட்டம் தொடர் கின்றது.

மூன்றாவது பணியாக, பிரித்தானியாவில் ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகமும் ஆய்வகமும் (European Tamil Documentation and Research Centre) என்ற ஒரு தொண்டர் அமைப்பை உருவாக்கியிருக்கின்றேன். இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பை பிரித்தானிய அறக்கட்டளையாகப் பதிவு செய்திருக்கின்றேன். இதில் 07 Trustees இருக்கின்றார்கள். அதனைவிட ஆவணக் காப்பகத்தின் மிகமுக்கிய பணி ஈழத்தில் இருந்து வெளி வரக்கூடிய நூல்களைப் பாது காப்பாக பாதுகாத்து வைத்திருப்பதாகும். ஆய்வாளர் களுக்கு தேவைப்பட்டால் அதற்கான தகவல்களையோ அல்லது நூல்களையோ பெற்றுக் கொடுப்பதாகும். இது நூலகம் அல்ல. வேண்டுமானால் சுவடிகள் காப்பகம் என்று குறிப்பிடலாம். எதிர்காலத்தில் தனியான கட்டிடம் ஒன்று கிடைக்கும் பட்சத்தில் அதில் நுல்களை ஒழுங்கமைத்து சர்வதேச ரீதியில் ஆய்வாளர்கள் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

என்னுடைய நான்காவது பணி என்னவெனில் லண்டன் புத்தகச் சந்தையை நடாத்தியதாகும். இது வர்த்தக நோக்கமற்றது. ஈழத்தில் நலிவடைந்து செல்கின்ற ஈழத்துப் பதிப்புத் துறையை மேலுயர்த்துவதற்காக இவ் வேலைத் திட்டத்தைச் செய்கின்றோம். இதுவும் புலம் பெயர்ந்த பின் நான் மேற்கொண்ட மிக முக்கியமான பணியாகும். இதனை 2007ம் ஆண்டிலிருந்து இன்றுவரை மேற்கொள்கின்றேன். இதுவரை சுமார் 11 புத்தகக் கண்காட்சிகளையும் சந்தைகளை யும் ஒழுங்கு செய்துள்ளேன். இப் புத்தகச் சந்தை வாயிலாக நான் மேற்கொள்ளும் பணி யாதெனில், ஈழத்து தமிழ்ப் பதிப்பகங்களது நூல்களை இலங்கை விலையில் ஏற்றுமதிச் செலவுடன் அங்கு பெற்று லண்டனில் உள்ள வாசகர்களுக்கு மலிவு விலையில் சேர்ப்பிப்பதாகும். லண்டனில் உள்ள குறைபாடு என்னவெனில் புத்தக வெளியீடுகள் என்பது இங்கு குறைவு. பெரிய புத்தகக் கடைகள் என்பது மிகக் குறைவு என்பதுடன் இலங்கைப் புத்தகங்களைப் பெறுவதும் மிகக் கடினம். ஐரோப்பாவில் சில புலம்பெயர்ந்தவர்கள் தற்போது சிறிய மட்டங்களில் புத்தகசாலைகளை, விற்பனை நிலையங்களை நடாத்துகிறார்கள். அவர்களும் கட்டடத்திற் கான வாடகை, நடைமுறைச் செலவுகளால் புத்தகத்தின் விலையை அதிகரித்தே விற்க வேண்டிய நிலை காணப்படு கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் மிக எளிமையாக லண்டனில் வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவை இப் புத்தகச் சந்தை நடாத்தப்படுகின்றது. பொது இடங்களைத் தெரிவு செய்து நூல்களை கடைபரப்பும் போது அங்கு வாசகர்கள் வந்து புத்தகங்களை வாங்கிச் செல்வார்கள். புத்தகச் சந்தைக் கான அறிவித்தலை நாங்கள் முதலிலேயே வெளியிட்டு விடுவோம். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு இடத்தில் இதனை மேற்கொள்கின்றோம்.

லண்டனில் புத்தகச் சந்தையை நான் மேற்கொள்வதற் கான தேவை என்ன என நீங்கள் கேட்கலாம். உண்மையில் புத்தகச் சந்தையின் பின்னணியில் ஒரு விடயம் இருக்கின்றது. ஈழத்து புத்தகச் சந்தையைப் பார்த்தால் சில குறிப்பிட்ட பதிப்பகங்களே ஈடுபாடு கொண்டிருக்கின்றன. குமரன் புத்தக நிலையத்தை பிரதானமாகக் குறிப்பிடலாம். அவர்கள் 1000இற்கும் அதிகமான புத்தகங்களை வெளியிட்டுள்ளார் கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, இறக்கமதி நூல் வர்த்தகத் தில் ஈடுபட்டாலும், அவர்களும் சில புத்தகங்களைப் பதிப்பித்து வருகின்றனர். அதனை விட ஞானம் பதிப்பகம், ஜீவநதி பதிப்பகம் என விரல் விட்டு எண்ணக்கூடிய சில பதிப்பகங்களே ஈழத்தில் புத்தகங்களை நிறுவன ரீதியாக வெளியிட்டு வருகின்றன.

இலங்கையில் தமிழர்களிடையே நூல் வெளியிடு வோரில் 90% இற்கும் சற்றே அதிகமானவர்கள் ஆசிரிய வெளியீட்டாளர்களாகவே இருக்கின்றார்கள். ஆங்கிலத்தில் இவர்களை Author Publishers என்று கூறுவோம். இவர்கள் தனிமனித நிறுவனங்களாக இயங்கி தாங்களே புத்தகத்தை எழுதி, அச்சிட்டு வெளியிட்டு வருகிறார்கள். வெளியீட்டு நிகழ்வுகளின்வாயிலாக சொற்ப வருமானத்தைப் பெற்றுக் கொண்டு விட்டு எஞ்சிய நூல்களை விநியொகிக்க வழியின்றி வீட்டில் வைத்திருக்கின்றார்கள். இலங்கையின் பிரபல்ய மான புத்தகக் கடைகள் கூட அவர்களது நூல்களை பெருமளவில் பெற்று விற்பனை செய்வதில்லை. அவர்களது குறி எப்போதும் தமிழக நூல்களை அதிக விலைக்கு விற்று லாபமீட்டுவதே. இப்போது, ஈழத்து எழுத்தாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வெளியிடுவதை விட இந்தியாவில் வெளியிடுவதை விரும்புகிறார்கள். தமிழகத்திலும் தங்கள் நூல்கள் இலகுவாக வாசிக்கப்படும் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். ஓரளவு வசதி படைத்தவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் உட்பட இந்தியாவில் காலச்சுவடு, அடையாளம், மணிமேகலை போன்ற நிறுவனங்களின் ஊடாக அங்கு அச்சடித்து இந்தியாவிலும், பிறநாடுகளிலும் விற்பனை செய்கிறார்கள். இலங்கைக்கு இப் புத்தகங்கள் கிடைப்பது மிக அபூர்வமாக இருக்கின்றது. இலங்கையில் நூல்கள் உருவாகும் அளவிற்கு புத்தக விநியோகத் திட்டமோ, புத்தக வெளியீட்டுத் துறையோ இலங்கையில் போதிய வளர்ச்சி காணவில்லை. இந்நிலையில் அழிந்து செல்லும் இலங்கையின் பதிப்புத்துறைக்கு ஆதரவு தரும் நோக்கில் ஒரு கணிசமான விற்பனையை பெற்றுக் கொடுக்கும் வாய்ப்பினை லண்டனில் ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தில் இதனைச் செய்து வருகின்றேன். இவையே நான் புலம்பெயர்ந்ததன் பின்னர் செய்து வந்த பணிகளில் சட்டென நினைவுக்கு வருவன.

நீங்கள் இதுவரை காலமும் கிட்டத்தட்ட 48 நூல்களை வெளியிட்டிருக்கின்றீர்கள். அந்தவகையில் நீங்கள் எழுதிய நூல்களில் மிக முக்கியமான நூல்கள் எனக் கருதும் நுல்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

ஆம். இதுவரை நூல்தேட்டத்தில் 12 தொகுதிகள் (13வது அச்சில் உள்ளதால் அதனை விடுத்தே குறிப்பிடுகிறேன்) உட்பட 49 நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன. ஐம்பதாவது நூல் அடுத்ததாக வெளிவர இருக்கின்றது. நூல்தேட்டங்களின் 12 தொகுதியை விட முக்கியமான நூல்தேட்டப் பதிப்பு இரண்டு இருக்கின்றது. முதலாவது ஈழத்துத் தமிழர்களால் எழுதப்பட்ட ஆங்கில நூல்களைத் தொகுத்து Noolthettam என்ற பெயரில் ஆங்கிலத்தில் முதலாவது தொகுதியை தனித்தொகுப்பாக எனது 26ஆவது நூலாக 2009இல் வெளியிட்டேன். அதன் அடுத்த தொகுதியை விரைவில் வெளியிடுவதற்கான ஆயத்தத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொண்டிருக்கின்றேன். இதன் சாத்தியப்பாடுகள் குறைவாகவெ எனக்குத் தெரிகின்றன. நிதிவசதி, தகவல் பெறுவதில் பிரயத்தனம் என்பன இத்தொகுதியின் வரவை பின்தள்ளிக்கொண்டே செல்கின்றது.

இரண்டாவது, மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டம் என்ற பெயரில் அந்நாட்டு நூல்களுக்கானதொரு தொகுதியை கார்த்திகை 2007இல் வெளியிட்டேன். அதனை நூலகம் இணையத்தில் பார்வையிடலாம். மலேசிய தேசிய நில நிதிக்கூட்டுறவுச் சங்கம் என்ற அமைப்பு இருக்கின்றது. தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் மிகப் பலம் வாய்ந்த அமைப்பு. மலேசிய தேசிய நில நிதிக்கூட்டுறவுச் சங்கம், மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை, மலேசிய எழுத்தாளர் சங்கம் என்பன இணைந்து மலேசியா சென்றிருந்த சமயத்தில் எனக்கு ஒரு கோரிக்கை விடுத்தார்கள். அதுவொரு சுவாரசியமான சம்பவம்.

இலங்கையில் இருந்து **1912, 1913**ஆம் ஆண்டுகளில் இருந்து **1934, 1935**ஆம் ஆண்டு வரை இலங்கையிலிருந்து பலர் அங்கு பொருளாதாரப் புலப்பெயர்வினை மேற்கொண்டு சென்றிருந்தார்கள். அங்கெ அவர்கள் பல தமிழ் நூல்களை எழுதியிருக்கின்றார்கள். "மலாயா மான்மியம்" என்ற மலாயா நாட்டின் வரலாற்றை எழுதியவர் சரவண முத்துப்பிள்ளை முத்துத்தம்பிப்பிள்ளை என்ற இலங்கைத் தமிழர். **1937**இல் முதலாவது பாகத்தையும், **1939**இல் அதன் இரண்டாவது பாகத்தையும் எழுதி வெளியிட்டிருந்தார். மலாயாவின் இரண்டாவது நாவலை (பாலசுந்தரம் அல்லது சன்மார்க்க ஜெயம்) எழுதியவர் புலோலியூர் க.சுப்பிரமணியம் என்ற இலங்கைத் தமிழர். சிங்கப்பூரின் முதலாவது தமிழ் நூலான "சிங்கைநகர் அந்தாதி"என்ற நூலை **1887**இல் எழுதியவர் சி.ந.சதாசிவ பண்டிதர் என்ற ஈழத்தமிழர். இவர் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர். இவ்வாறு மலாயாவின் இலக்கியத் துறையில் மிக ஆரம்ப காலத்தில் தடம் பதித்த முன்னோடிகளாக இருந்தவர்கள் ஈழத்துத் தமிழர்கள். ஆனால் அவர்கள் எம்மவர்களால் இலங்கை எழுத்தாளர்களாகக் கணிக்கப்படவில்லை. ந.சி.கந்தையாபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர் 66 நூல்களை எழுதியிருக்கின்றார். இவர் கந்தரோடையைச் சேர்ந்தவர். இங்கிருந்து மலாயாப் பகுதியில் வேலை செய்து தமிழகத்தில் தனது நூல்களை வெளியிட்டிருக்கின்றார். இவரது நூல்கள் தற்போது மீள் பதிப்புச் செய்யப்படுகின்றது. தற்போது தான் நா.சி.கந்தையாப்பிள்ளை பற்றி புரிதல் எம்மவரிடையே படிப்படியாக உருவாகி வருகின்றது. இவ்வாறு பல ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் புலம் பெயர்ந்து சென்று மலாயாவின் எழுத்துத் துறையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களது நூல்களைத் தேடி மலேசியாவிற்கு சென்றிருந்தேன். மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் அந் நூல்களைத் தேடி எடுத்துத் தருவதில் மலேசியா பல்கலைக்கழகமும், சிங்கப்பூர் தேசிய நூலகமும் மிகவும் உதவியாக இருந்திருக்கின்றது. அந்நூல்களைப் பார்வையிட்டு எனது நூல்தேட்டத் தொகுதிகளில் விரிவாகப் பதிவு செய்திருக்கின்றேன்.

1969ம் ஆண்டில் இராம சுப்பையா என்ற மலேசியரது தொகுப்பு மயற்சியில் தமிழ் மலேசியானா என்ற நூல் 78 பக்கங்களில் 401 நூல்களைப் பதிவுசெய்திருந்தது.

அவ் வேலைத் திட்டத்தை அந்த மண்ணில் மேற்கொண்டுவந்த பொழுதிலே அங்குள்ளவர்களால் மலேசியாவிற்கும் இவ்வாறானதொரு ஒரு நூல்தேட்டத்தை உருவாக்கித் தரும்படி என்னிடம் வேண்டுகோள் முன் வைக்கப்பட்டது. அவர்களின் அன்பான வேண்டு கோளினை தட்டிக்கழித்துவிட முடியாத மனநிலையில், ஒரு தடவை மலேசியாவில் மூன்று வாரமளவில் தங்கியிருந்து அங்குள்ள மலாயா தமிழர்களின் நூல்களைப் பதிவு செய்தேன். கனக செந்திநாதன், சில்லையூர் செல்வராஜன், எப்.எக்.சி.நடராசா போன்றவர்கள் இங்கு தயாரித்தது போல அங்கு இராம சுப்பையா என்பவர் ஏற்கனவே சிறு நூற்பட்டியலை 1969இல் உருவாக்கியிருந்தார். 78 பக்கங்களில் 401 நூல்களை அவர் பதிவுசெய்திருந்தார். இந்நூலை அடிப்படையாகக் கொண்டு அதனை விரிவாக்கி பெரும் தொகுப்பாக 2081 நூல்களின் தகவல்களுடன் உருவாக்கினேன். நூலகம் இணையத்தில் இது பதிவிடப் பட்டுள்ளது. இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான நூலாகக் கருதுகின்றேன். மாலாயாத் தமிழர் களுக்கு புலம்பெயர் தமிழனின் பங்களிப்பாக இந் நூல் போற்றப்பட்டு வந்தது. சிங்கப்பூர் தேசிய நூலகம் அந்நூலுக்காக பெரும் வெளியீட்டு விழாவொன்றையும் நடத்தியது.

இதனைத தவிர முக்கியமான நூல்கள் எனும் போது 2001ம் ஆண்டு "யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு" என்ற நூலை எழுதியிருந்தேன். அதுவரை காலமும் க.சி.குலரட்ணம் எழுதிய "யாழ்ப்பாண நூலகம்" என்றவொரு நூல் மட்டுமே பார்வைக்கு இருந்தது. அந்நூலில் அமரர் க.மு.செல்லப்பா யாழ்ப்பாண நூலகத்தை உருவாக்கியது முதல் வே.இ.பாக்கியநாதன் அவர்கள் 1967இல் நூலகத்தை பொறுப்பேற்றது வரையான வரலாறு சொல்லப்பட்டுள்ளது. அவருடைய காலத்தின் பின்னர் நூலகக் கட்டிடங்கள் விரிவாக்கப்பட்டது, 1981 நூலகம் எரிக்கப்பட்டது, பின்னர் 1984இல் அது தமிழர்களின் பாரிய முதலீட்டுடன் மீளக்கட்டியமைக்கப்பட்டது, 1985 கோட்டைத் தாக்குதலில் சிதைவாக்கப் பட்டது, பின்னர் 2004 இல் சந்திரிக்கா பண்டார நாயக்காவால் நூலகத்தில் "புத்தகமும் செங்கல்லும்" என்ற வேலைத்திட்டத்தின் மூலம் நூலகத்தை புனரமைக்கும் பணிகள் நடந்தேறியது என இவ் வரலாறு நீண்டு செல்கின்றது. யாழ்ப்பாண வரலாற்றின் ஒரு பகுதியை அதாவது போர்க்கால அழிவையும் அதன் பின்னரான விடயத்தையும் நான் ஆவணப்படுத்தியிருக் கின்றேன். இன்றளவில் அதனை ஒரு மிக முக்கியமான நூலாகக் கருதுகின்றேன். இதன் மீள்பதிப்பொன்றினை புதிய பல தகவல்களுடன் இற்றைப்படுத்தி வெளியிடும் எண்ணமும் உண்டு.

யாழ்ப்பாணத்தில் வெளிவந்த முதலாவது பிராந்தி யத் தினசரியான ஈழநாடு பத்திரிகையைப் பற்றி அறிந்திருக் கின்றோம். இலங்கையில் வெளிவந்த முதலாவது பிராந்தியப் பத்திரிகை என்றும் தமிழில் வெளிவந்த முதலாவது பிராந்தியப் பத்திரிகை என்றும் கூட அதனைக் குறிப் பிடலாம். யாழ்ப்பாண மக்களின் மிக அபிமானத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரியதாக ஈழநாடு காணப்பட்டது. அது 1954, 1955 களில் தொடங்கி யாழ்ப்பாணத்தில் நிறுவனமயப் படுத்தப்பட்டு கே.சி.தங்கராஜா, சண்முகரட்ணம் ஆகிய சகோதரர்களால் உள்வாங்கப்பட்டு வளர்ந்து போர்க்காலத்தில் நிறுத்தப் பட்டது வரையான வரலாற்றை இதுவரை யாரும் எழுத வில்லை. இதுவொரு மனக்குறையாக எனக்கு இருந்தது. ஈழநாட்டில் பணியாற்றியவர்கள் பல்வேறு ஊடகங்களில் தமது தடம்பதித்து உலகநாடுகளில் கோலோச்சி வரு கின்றனர். ஈழநாட்டைப் பற்றி சிறுசிறு கட்டுரைகளாக, செய்திகளாக ஆங்காங்கே இடம்பெற்றிருந்த நிலையில் ஈழ நாட்டில் பணியாற்றிய ஊழியர்கள், அதன் பணியாளர்கள், அதன் வளர்ச்சிக்கு காரணமானவர்களுடன் தொடர்பு கொண்டேன். எனக்காக நேரமொதுக்கி கட்டுரை வழங்கக் கூடியதாக இருந்தவர்களின் கட்டுரைகளைத் தொகுத்து எனது முன்னுரையுடன் "ஈழநாடு ஒரு ஆலமரத்தின் கதை" என்ற பெயரில் அதனை உருவாக்கியிருந்தேன். அந் நூலும் எனக்கு மனத் திருப்தியைத் தந்த வரலாற்றாவண நூல்களில் ஒன்று.

அதனைத் தவிர தற்பொழுது வெறும் பல வெளி யீட்டுப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றேன். நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு ஈழத் தமிழர்களின் அரசியல் போர்க்கால வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டம் எனக் குறிப்பிடலாம். 1974.01.10 திகதி இடம் பெற்ற படு கொலைகள் அதற்கு முன்னர் அம்மாநாடு தொடர்பான நடவடிக்கைகள் பின்னர் அம் மாநாடு பற்றிய கருத்துக்கள் என்பவற்றைத் தொகுத்து வெளியிடுவதற்கான தகவல் களைத் திரட்டி வருகின்றேன்.

இலங்கையின் சுருட்டுக் கைத்தொழில் யாழ்ப் பாணத் தமிழர்களின் அடிநாதமாக இருக்கின்றது. தற்போது இக் கைத்தொழில் பெரும்பாலும் வடபுல மண்ணில் இல்லாமலேயே போய்விட்டது. புகையிலைத் தோட்டங்க ளெல்லாம் மாடி வீடுகளாகவும் கல்யாண மண்டபங்களாக வும் ஆக்கிரமிக்கப்பட்டுவருகின்றன. ஆரம்ப காலத்தில் மிகப் பிரபலமாக இருந்த யாழ்ப்பாணத்து சுருட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் தொடர்பான வரலாற்றுக் குறிப்புக்களை தேடி எடுத்து நூலுருவாக்கம் செய்வதும் என்னுடைய முயற்சியாக இருக்கின்றது. செங்கை ஆழியான் "சுருட்டுக் கைத்தொழில்" என்ற பெயரில் ஒரு நூல் எழுதியிருக்கின்றார். அது பொதுவாக புவியியல் சார்ந்த தகவல்களைப் பெற உதவுகின்ற நூல் ஆகும். அதிலிருந்த தகவல்களுடன் மேலும் தகவல்களைச் சேர்க்க வேண்டிய தேவை உள்ளது. நீர் கொழும்பில் சுருட்டுத் தொழிலாளர் சங்கம் என்று இருக் கின்றது. இவ்வாறு பல அமைப்புக்கள் இருக்கின்றன. கேரள மலையாளிகளுடன் தொடர்புபட்ட யாழ்ப்பாணத்துச் சுருட்டுக் கைத்தொழில் பற்றிய தகவல்களைத் திரட்டிக் கொண்டிருக்கின்றேன்.

இவற்றைத் தவிர சர்வோதய அமைப்பின் யாழ் மாவட்ட இணைப்பாளர் க.திருநாவுக்கரசு என்ற ஒருவர் இருந்தார். அவர் 17 ஆண்டுகளுக்கு முன்னர் காலமாகி யிருந்தார். 17வது ஆண்டு நினைவஞ்சலி நேற்று இடம் பெற்றிருந்தது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள் வதற்காகவே இம்முறை யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தேன். இவர் ஒரு மிக முக்கியமான வரலாற்று நாயகனாக இருப்பினும் அவருடைய வாழ்க்கை வரலாறு இதுவரை விரிவாக எழுதப்படவில்லை. அவருடைய வாழ்க்கை வர லாற்றை நூலாக எழுதிக் கொண்டிருக்கின்றேன். இதனை எனது 53வது நூலாக வெளியிடும் எண்ணமுண்டு. நூலிற்கான பெயர்கூட என் மனதில் "ஒரு தொண்டரின் பாதை" என்பதாக தீர்மானித்து விட்டேன்.

நான் எழுதிய அனைத்து நூல்களும் முக்கியமானவை என்றே கருதுகின்றேன். இவற்றில் ஜனரஞ்சக ஆக்க இலக்கி யங்கள் எதுவுமில்லை. அனைத்தும் ஏதோவொரு வகையில் எமது சமூக வரலாற்றினை ஆவணப்படுத்துவதாகவே அமைந்தவருகின்றது.

அந்தவகையில் இந்த நூல்கள் எனது பணியின் சுமையினை அதிகரித்தபடி இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களை எல்லோரும் நூலகவியலாளர் என்று அழைக்கிறார்கள் அந்த வகையில் நூலகருக்கும் நூலகவியலாளருக்கும் இடையிலான வேறுபாடு என்னவாக இருக்கும் எனக் கருதுகிறீர்கள்?

நூலகவியலாளர் என்பது மேடைகள் எதிலும் வைத்து எனக்குப் பட்டமாக வழங்கப் பட்டதாக எனக்கு நினைவிலில்லை. காலக்கிரமத்தில் ஊடகங்களில் இச் சொற்பிரயோகம் எனது பெயருக்க முன்னால் சேர்க்கப்பட்டு விட்டது. எனது நினைவுக்கு எட்டிய வகையில் லண்டனில் இயங்கிவரும் “தேசம்” என்ற இணையத்தள சஞ்சிகையொன்று ஊடகவியலாளரான திரு தம்பிராஜா ஜெயபாலனை ஆசிரியராகக் கொண்டு லண்டனிலிருந்து இயங்கி வருகின்றது. இவ் இணையத்தளம் என்னுடைய கட்டுரைகளை விரும்பிப் பயன்படுத்துகின்றது. உலகளாவிய ரீதியில் ஊடகங்களுக்கு நான் எழுதும் கட்டுரைகளை எவரும் நல்நோக்கத்துடன் அவற்றை மீள்பதிப்புச் செய்யலாம் என்ற அனுமதி என்னால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தேசம் இணையத்தளம் என்னைப் பற்றி ஒரு கட்டுரையை எழுதினார்கள். அது எப்பொது என்று ஞாபகம் இல்லை. இக் கட்டுரையில் முதன் முதலில் நூலகவியலாளர் என்.செல்வராஜா என்று என்னை அறிமுகப்படுத் தினார்கள். இதனை யார்? எவ்வாறு அச் சொல்லை அவர்களுக்கு வழங்கினார்கள் என்பது தெரியாது. சமூகத்தினால் வழங்கப்பட்ட பட்டமாக, கௌரவமாக நான் இதனைக் கருதுகின்றேன்.

பட்டங்கள் வழங்கப்படுவது தொடர்பாக எனக்கு மாற்றுக் கருத்துக்கள் இருக்கின்றன. அதில் எனக்கு பெரும் ஈடுபாடும் இருப்பதில்லை. ஒரு பட்டத்திற்கோ விருதுக்கோ விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து வழங்கி பலரையும் “காக்காய்” பிடித்து பட்டங்களைப் பெறுபவர்கள் தொடர்பாகவும் எனக்கு ஈடுபாடு இருப்பதில்லை. பொதுவெளியில் வழங்கப்படும் கலாநிதிப் பட்டங்கள் எல்லாம் இன்று கேள்விக்குரியதாகவே இருக்கின்றன. கஷ்டப்பட்டுப் படித்துப் பெற்ற பட்டங்களை இத்தகைய பட்டங்களுடன் எவ்வாறு சமானப்படுத்துவது?

நீங்கள் கேட்ட கேள்விக்கு வருகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகவியலாளர் என்ற பதம் எவ்வாறு உருவாகின்றது என்றால் நூலகம் என்ற பௌதீகக் கட்டிடத்தில் உள்ள நூல்களையும். அதற்கான சேவைகளையும் வாசகர்களுக்கு வழங்கும் பணியை ஆற்றுபவர் "நூலகர்". நூலகர் ஒரு நிறுவனத்தின் பணியாளராக பணியாற்றுவார். என்னைப் பொறுத்தவரையில் கட்டிடம் எதுவுமில்லை, இரவல் கொடுத்துப் பெறும் நூல்களும் என்னைச் சுற்றியிருக்க எவில்லை. பரந்த உலகில் நூலகங்கள், நூல்கள், வாசகர், எழுத்தாளர்கள், வெளியிட்டாளர்கள், நூலியலாளர்கள், ஊடகவியலாளர்கள் என அனைத்துத் துறைகளிலும் நான் தடம் பதித்தால் பொதுப்படையாக என்னை "நூலகவிய லாளர்" என்ற பெயரில் அழைக்கின்றார்கள். நூலகவியலாளர் என்பவர் வரையறுக்கப்பட்ட நூலகப் பணிகளுக்கு மேலாக நூலையும் சமூகத்தையும், படைப்பாளர்களையும் இணைக்கும் பணியை வாழ்நாள் முழுவதும் செய்பவர். வேதனமற்ற முழுநேர செயற்பாட்டாளர். சில இடங்களில் "நூலியலாளர்" என்ற பதத்தாலும் என்னைக் குறிப்பிடத் தொடங்கியிருக்கிறார்கள். நூல்கள் பற்றிய அறிவூட்டல் களை எனது கட்டுரைகளோ உரைகளோ வழங்குவதாலும் பதிப்புத்தறை, எழுத்துத்துறை, வெளியீட்டுத்துறை என்ப வற்றிலும் நான் குறிப்பிட்ட அளவு கவனம் செலுத்துவதா லும் என்னை "நூலியலாளர்" என்றும் அழைக்கின்றார்கள் என்பதே எனது எண்ணமாகின்றது. தமிழில் நூலகவியலாளர் என்று என்னைக் குறிப்பிடுவதே அதிகமாக காணமுடி கின்றது. இதுவே நூலகருக்கும் நூலகவியலாளருக்கும் இடையிலான வித்தியாசம் என நினைக்கின்றேன்.

நூலகர் என்ற தனிநபரிலிருந்து நூலகவியலாளர் என்ற நிலையை அடைவதற்கு உங்களுடைய பரந்து பட்ட வாசிப்பு காரணமாக இருந்திருக்கும் என்று நினைக்கின்றேன். இவ் வாசிப்புப் பற்றிக் குறிப்பிட முடியுமா?

நூலகர் என்ற நிலையிலிருந்து நூலகவியலாளர் என்ற நிலையை அடைவதற்கு வாசிப்பு மட்டும் காரணமாக அமையாது. காரணம் எங்களுடைய நடவடிக்கைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது சமூகம் சார்ந்த அறிவு, அனுபவம், விழிப்புணர்வு என்பனவும் அவசியம். ஒரு நூலகர் நூலகவியலாளராக பரிணாம வளர்ச்சியடைய வேண்டுமானால் முதலில் மக்களின் மனங்களில் அவர்பால் ஒரு நன்மதிப்பும் கௌரவமும் இயல்பாக ஏற்படவேண்டும். அதற்காக நீண்ட கரடு முரடான பாதையில் நீண்டகாலம் பயணித்தாக வேண்டும். அதாவது எழுத்தாளர் மத்தியில் நூலகர் நன்கு பிரபல்யமாக வேண்டும். நூலகர் தனது சமூகநலன் நாடிய செயற்பாடுகளால் இதனை அடையவேண்டும். தன்னைச் சுற்றி வெளிவரும்புதிய நூல்கள் பற்றியும், அதன் படைப்பாளி பற்றியும் அறிந்துகொள்ளவேண்டியது ஒரு நூலகரின் அடிப்படைப் பண்பாக இருக்கவேண்டும். அதற்கு நூல்களின்பால் ஈர்ப்பு வேண்டும். இன்று எத்தனை நூலகர்கள் தங்கள் பிரதேச எழுத்தாளர்களை அறிந்து வைத்திருக்கிறார்கள்? எத்தனை நூலகர்கள் தமது பிரதேசத்தில் நடக்கும் நூல்வெளியீடுகள், புத்தகக் கண்காட்சிகளுக்கு சென்று வருகிறார்கள்?

இன்று நூல்தேட்டம் வாயிலாக எழுத்தாளர்கள் மத்தியில் நான் மிகப் பிரபலமாக அடையாளப்படுத்தப் பட்டிருக்கின்றேன். விரும்பியோ விரும்பாமலோ அறிந்தோ அறியாமலோ ஈழத்திலுள்ள எழுத்தாளர்கள் ஒவ்வொருவரையும் அதாவது இளம் எழுத்தாளர்களை அல்லது மூத்த எழுத்தாளர்களை அல்லது மறைந்து போன எழுத்தாளர்களை. அவர்களின் பணிகளை காய்த்தல் உவத்தலின்றி உலகத்திற்கு எடுத்துச் சொல்லும் பணியை சொந்த முதலீட்டில் சொந்த நேரத்தில் மேற்கொண்டு வந்திருக்கின்றேன்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல முழுநேர ஊழியராக பிரித்தானியாவில் பணியில் இருந்து கொண்டு அந்தப் பணியிலும் நன்மதிப்பையும் பதவி உயர்வுகளையும் பெற்றுக் கொண்டு அந்தத் துறையிலும் கௌரவிக்கப் பட்டிருக்கிறேன். இதற்கு வாசிப்பு அவசியமாக இருக்கவில்லை. கடின உழைப்பும் தன்நம்பிக்கையுமே அதிகம் தேவையாகவிருந்தது.

உங்கள் கேள்விக்கான பதிலாக இல்லாவிடினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒன்றைச் சொல்லவேண்டும். இதுவரையிலும் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை நூல்தேட்டத்தின் வாயிலாகவும், வானொலி ஊடகங்கள் வாயிலாகவும், விமர்சன, அறிமுகக் கட்டுரைகள் வாயிலாகவும் அறிமுகப் படுத்துவதற்கு பிரதி உபகாரமாக எழுத்தாளர்களிடம் நேரடியாக எதனையும் நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நான் அவர்களிடம் எதிர்பார்ப்பது அவர்களுடைய படைப்புக்களை உலகறியச் செய்வதற்கு நீங்கள் எனக்க உதவத் தயாரானால் உங்களுடைய நூலின் ஒரு பிரதியை எனக்கு அனுப்புவதன் மூலம் நான் அதனை நூல்தேட்டம் தொகுதிகளில் பதிவுசெய்து அவ்வாவணத்தின் வாயிலாக உலகளவில் உங்கள் படைப்புக்களின் இருப்பினை எடுத்துச்சொல்வேன்.

இருப்பினும் எனது அனுபவத்தின் வாயிலாக நான் கண்டறிந்தது, பெரும்பான்மையான எழுத்தாளர்கள் எனது நோக்கத்தை சரியாகப் புரிந்தகொள்ளவில்லை என்பதுதான். நான் இலங்கைக்கு வரும் போதெல்லாம், தமிழ்ப் பிரதேசமெங்கிலும், தலைநகர் கொழும்பிலும் அவ்வப்போது கூட்டங்களை அன்பர்கள் ஒழுங்குசெய்கின்றார்கள். அங்கு நான் அதிகம் எதிர்பார்ப்பது எழுத்தாளர்களையும் நூலகர்களையுமே. என்னைப் பின்தொடர்ந்து எனது கூட்டம் இடம்பெறும் இடங்களுக்கு வருவீர்கள். அங்கே எனது வேண்டுகோளுக்கு செவிமடுப்பீர்கள். உங்கள் நூல்களை என்னிடம் கையளிப்பீர்கள் என்ற நப்பாசையுடன்தான் ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்துகொள்வேன்.

தற்போது இந்த மனநிலையில் எழுத்தாளர்களிடம் அல்லாது பதிப்பகங்களிலும், நலன்விரும்பிகளிலும் ஒரு மாற்றம் தென்படுகின்றது. விரல்விட்டெண்ணக்கூடிய ஒரு சிலர் எனது நூல்தேடல் பளுவை குறைக்கும் வகையில் நூல்களுக்கான பதிவை நான் மேற்கொள்ள பிரதிபலன் எதிர்பார்ப்புகள் எதுவுமின்றி உதவிவருகிறார்கள். எனக்கு புத்தகங்களை தேடித் தருவதன் மூலம் அல்லது தகவல்களைத் திரட்டித் தருவதன் மூலம் எனக்கு உதவமுன்வந்துள்ளார்கள்.

நூலகவியல் என்ற துறைக்கு அப்பால் நூலியல் துறையிலும் அக்கறை கொண்டுள்ளேன். வெளியீட்டாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எவ்வாறு நூல்களை வெளியிட வேண்டும் என்பது தொடர்பில் சிந்தனை விரிவு ஏற்பட்டிருக்கிறது. இதுவரை ஆவணப்படுத்தியுள்ள 13000 நூல்களைப் பார்த்து, அதனூடாக பிரயாணம் செய்து எழுத்தாளர்களுக்கும் வெளி யீட்டாளர்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகளை அவதானித்து ஒரு நூல் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்ற பொதுவான வழிமுறைகளை எழுத்தாளர்களிடம் வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு இருக்கின்றது. அண்மைக்காலத்தில் ஞானம் சஞ்சிகையில் கட்டுரைத் தொடர் ஒன்றை 18 மாதங்கள் வரையில் எழுதியிருந்தேன். அது விரைவில் நூலுருவாகும் வாய்ப்பு காணப்படுகின்றது. ஒகஸ்ட் 2015 முதல் நவம்பர் 2016 வரை ஞானத்தின் ஒவ்வொரு இதழிலும் நூலின் வெளியீடு தொடர்பான ஒவ்வொரு விடயத்தையும் முன் வைத்து எழுதியிருக் கின்றேன். புத்தகத்தின் அட்டைப் படம் எவ்வாறு இருக் கின்றது, எப்படி இருக்க வேண்டும், அதிலுள்ள குறைபாடு கள் என்ன, நூலியல் தகவல்களைக் கொடுக்கும்போது எதனைக் கொடுக்க வேண்டும் என்பவை முக்கியமானது. எழுத்தாளர்களின் புத்தகங்களின் சிலவற்றில் ஆண்டுகள் இருக்கமாட்டது. ஆண்டை பதிவிட்டால் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் பழைய புத்தகமாகி விடும் என்பதால் அதனை பதிவிடமாட்டார்கள். இதுவொரு மிகக் கேவலமான பின்தங்கிய சிந்தனை ஆகும். ஆண்டு பதிவிடா விட்டால் அப் புத்தகம் எப்பொழுது வெளிவந்தது என்பது தெரியாது. 1991ம் ஆண்டு வெளிவந்தால் என்ன அல்லது 2000ம் ஆண்டு வெளிவந்தால் என்ன? 1970ம் ஆண்டில் எழுதப்பட்டாலும் ஆண்டு விபரம் வெளிவராததால் அத புதுப் புத்தகமாகவே இருக்கும் என சில எழுத்தாளர்கள் நினைக்கிறார்கள். உதாரணமாக 1970ம் ஆண்டில் யாழ்ப்பாண நூலகத்தைப் பற்றி எழுதியிருக்கலாம். 2004ம் ஆண்டு அப் புத்தகத்தை ஒருவர் எடுத்து வாசிக்கும் போது நூலக எரிப்பு தொடர்பான விடயம் அதில் இல்லாமல் இருக்கும்போது இவ் வாசகருக்கு ஆசிரியர் தொடர்பில் தவறான அபிப்பிராயம் ஏற்படும். ஆண்டை பதிவிட்டிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் நூலக அழிவுக்கு முன்னர் எழுதப்பட்ட நூல் என்பதை இலகுவாக விளக்கிக் கொள்ள முடியும். ஆசிரியரின் தகுதியை, தராதரத்தை தவறாக எடை போடாது இருப்பதற்கு இவ் ஆண்டு என்பது முக்கியம். இதனூடாக நான் குறிப்பிட வருவது என்னவெனில் நூலியல் தகவல் களைச் நூல்களில் சரியாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். ஆசிரியர் தன்னுடைய பெயரை ஆசிரியர் எனப் பதிவிடாமல் தொகுப்பாசிரியர், பகுப்பாசிரியர், தொகுப்பாளர் எனப் பதிவிடுகிறார்கள். இதில் எது சரி யானது போன்ற நூலியல் தகவல்களை ஞானம் சஞ்சிகையில் தொடர் கட்டுரையாக வழங்கிக் கொண்டு வந்தேன். இது எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அதன் மூலம் என்னுடைய பணி பரந்த விரிவான செயல்தளத்திற்கு சென்றிருந்தது. நூலகர்கள் நூலகவியலாளர்களாக மாறு வதற்கான பாதை இவ்வாறே அமைய வேண்டும்.

நூலகவியலாளராக பல நூல்களை இலங்கைப் பாடசாலைகளுக்கு அன்பளிப்புச் செய்திருக்கிறீர்கள். இந்த வகையில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு உந்து சக்தியாக இருந் திருக்கின்றீர்கள் என்பது விளங்குகின்றது. இம் மாணவர்களுடைய வாசிப்புப் பழக்கம், அது பற்றிய கருத்துக்கள், வாசிப்புப் பழக்கத்தை எவ்வாறு ஊக்குவிக்க வேண்டும் என்பன தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன?

இலங்கையில் வாசிப்புப் பழக்கம் இன்று நலிவடைந்திருக்கின்றது என்ற எடுகோளில் அவ் வாசிப்புப் பழக்கம் வளர்ச்சியடைவதற்கு என்ன செய்யலாம்? ஏன் அவ்வாறு உருவாகியது என்பது தொடர்பாக பொதுவா எம்மிடையே நிலவிவரும் கருத்தை குறிப்பிடுகின்றேன்.

இலங்கையில் வாசிப்புப் கலாச்சாரம் குறை வடைந்தமைக்கு பெரும்பான்மையானவர்களின் எடு கோளாக இருப்பது தற்போதைய நவீன கணனி, தொலைக் காட்சி, முகநூல், கையடக்கத் தொலைபேசி போன்றவற்றின் பயன்பாடு என்பதாக ஒரு சாரார் குறிப்பிடுகிறார்கள். ரியூசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்புக்களுடனும், புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சை என அதிகம் கவனம் செலுத்துவதால் பொதுவான வாசிப்புப் பழக்கம் மாணவர்களிடையே குறைகின்றது என சிலர் குறிப்பிடுகிறார்கள். சிலர் நடந்து முடிந்த விடுதலைப் போராட்டத்தின் காரணமாக வாசிப்புப் பழக்கம் குறைவடைந்தது எனக் குறிப்பிடுகிறார்கள்.

எனது கருத்து இவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. வாசிப்பு என்பது முற்றிலும் தேடலுடன் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஒரு விடயம் பற்றிய தேடலில் இருந்தே வாசிப்புப் பழக்கம் உருவாக்கப்பட வேண்டும். உதாரணமாக பிரான்ஸ்க்கு புலம்பெயர்ந்து போகப் போகிறீர்கள் என்றால் பிரான்ஸ் எவ்வாறு இருக்கும் என்பதை அறியாமல் சில வேளைகளில் பயணிக்கலாம். ஆனால் அங்கு சென்று வாழமுற்படும்வேளை நிச்சயமாக பிரெஞ்சு மக்கள் பற்றியும் அவர்களது கலாச்சாரம் பற்றியும் ஆழமாக ஆராய வேண்டியிருக்கும். அதற்காக பிரான்ஸிற்கு செல்ல முன்பே பிரான்ஸைப் பற்றிய புத்தகம் ஒன்றைப் வாங்கி, அந் நாட்டின் நடைமுறை என்ன, கலாச்சாரம் என்ன?, எனப் பரந்த அறிவை உள்வாங்கிக் கொண்டு அங்கு செல்லும் போது அது மிகவும் பயனுடையதாக அமையும். இங்கு தகவலைத் தேடும் தேவை, வாசிப்புக்கான ஆவலை உருவாக்குகின்றது.

ஒருவருக்கு தனக்குத் தேவையான தகவலைத் தேடிப்பெற்று தனது அறிவை விருத்தி செய்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அடிப்படையானது. மற்றும் சிலர் வாசித்துப் பின்புல அறிவைப் பெறாமலே அங்கு போய் சமாளிக்கலாம் என்ற சோம்பேறித்தனமான போலித் தன்னம்பிக்கையுடன் பயணத்தைத் தொடங்கக்கூடும்.

எங்களுடைய மக்கள் மத்தியில் ஒரு தகவலைத் தேடி அறிய வேண்டும் என்ற ஆர்வம், அதனை பிறருடன் விவாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் அறவே இல்லை என்றே கூறவேண்டும். இக் கலாச்சாரம் எங்களிடமிருந்து அகன்றுள்ளது என்றே குறிப்பிட வேண்டும். இங்கு பிரித்தானியாவில் தன் குடும்பத்துடன் ஒரு பிள்ளை விடுமுறையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிக்க ஒரு அயல் நகரத்திற்கு போக திட்டமிடும் வேளை பெற்றோர் அந்தப் பிள்ளைக்கு முதலில் வாங்கிக் கொடுப்பது அவ்வூரைப் பற்றிய பயணநூல் தான்.

எங்களைப் பொறுத்தவரையில், சமூகத்தைப் பாதிக்கும் ஒரு பொதுவிடயத்தை குடும்பமாக அமர்ந்து ஆரோக்கியமாக விவாதிக்கத் தயாராக இல்லை. தனிநபர் சார்ந்த வதந்திகளிலும், அயலவரின் “பொட்டுக்கேடுகளை யும்” சுவாரஸ்யமாக விவாதிக்க சிலவேளை நேர மிருக்கும்.

ஒரு பொது விடயத்தையிட்டு விவாதிக்கும் போது, நான் ஒரு கருத்தை சொல்லும் போது, உடனிருப்பவர் அதனை அப்படியே ஏற்றுக்கொள்ளாவிட்டால், நீங்கள் என்னுடைய எதிரி ஆகிவிடுகிறீர்கள். சாதாரணமாக இதனை எமது குடும்பங்களில் காண முடியும். அறிவை விரிந்த பரப்பில் வைத்துக்கொண்டு மாற்றுக்கருத்துகளுக்கு வழி ஏற்படுத்தி, அவ்வாறும் இருக்கலாம் என உள்வாங்கும் வலு எங்களிடம் குறைந்து போயுள்ளது. இவை எங்களுடைய தலை முறைக்கு பாரம்பரியமாக கடத்தப்பட்ட தீமை. எல்லாவற்றையும் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையை இச் சமூகத்தில் உருவாக்கி யுள்ளோம்.

நான் தாய்நாட்டில் வாழ்ந்ததை விட அதிககாலம் இங்கிலாந்தில் வாழ்ந்திருக்கின்றேன் என்ற வகையில் அழுத்தமாகக் குறிப்பிடக்கூடியது என்னவெனில் பிரித்தானி யாவில் சாதாரண கட்டிடத் தொழிலாளியும், ஒரு வைத்தி யரும் கதைக்கும் போது சமதளத்தில் அமர்ந்தே கதைப் பார்கள். சமதளம் எனும் போது இவரும் தத்தமது அறிவினை விரிவாக்கிக்கொள்ளும் வகையில் உரையாடத் தொடங்கு கின்றார்கள். இருவரும் தத்தமது அறிவைப் பகிர்ந்து கொள்வதே அங்கு நிகழ்கின்றது. அதற்கெனவே இங்கு “பப்” Pub எனப்படும் Public Houses தெருவுக்குத் தெரு இயங்கு கின்றன. அங்கு நல்ல உணவு கிடைக்கும் மதுபானம் கிடைக்கும். இவற்றுக்கு மேலாக புதிய தொடர்புகள் கிட்டும். பொது இடங்களில் அறிவைத் திறந்த நிலை யிலேயே பரிமாறிக் கொள்கின்றார்கள். வைத்தியர் “அவருக் கென்ன என்னை விட அதிக அறிவு இருக்கப் போகின்றது”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நினைக்க மாட்டார். அதேபோல கட்டிடத் தொழிலாளியும் என்னைப் பற்றி என்ன தெரியப் போகின்றது என நினைக்கமாட்டார்.

விமான நிலையத்தில், புகையிரத நிலையத்தில், ரயில் பயணங்களின்போது என எந்த நிலையிலும் சக பயணியோடு அரசியலிலிருந்து பொருளாதாரம் வரை உரையாடும் வல்லமையில் இருக்கின்றார்கள். இது நான் கண்டு அதிசயித்த ஒரு விடயமாகும். சாதாரணமாக ஒருவரிடம் கேள்வி கேட்டு விட்டு பதிலை எதிர்பார்க்காது செல்ல முடியாது. அதற்கு மிகவும் தெளிவான பதிலை வழங்குவார்கள். BBC செய்தி அறிக்கையினைப் பார்வையிடும் போதே சாதாரண மக்களிடம் எவ்வளவு ஆழமான பொது அறிவு இருக்கின்றது என்பதை அறிந்து கொள்வீர்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பொதுஅறிவு போட்டிகளில் எவ்வளவு ஆழமான கேள்விகளாயினும் பங்கேற்பவர்கள் ஆழமான பதில்களைக் கூறுவார்கள்.

பாடசாலை மட்டத்தில் மாணவர்களைக் கூட இந்நிலையில் காணலாம். ஆனால் இங்கு மாணவர்கள் ஏன் என்ற கேள்வியை ஆசிரியரிடம் எழுப்புவதில்லை. இங்கிலாந்தில் ஆசிரியர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வேதம் ஓதுபவர்களாக இருப்பதில்லை. அவர்கள் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டு அதனை மாணவர்களுடன் விவாதிக்கின்றார்கள். அவர்களுடைய தரத்திற்கு அவர்கள் இறங்கி நின்று விவாதத்தைக் கொண்டு நடத்துகின்றார்கள். அதன் மூலம் அவர்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில் வாசிப்பு இதில் எங்கு தேவைப்படுகின்றதென்பதே. அவர்களுக்குத் தேவையான தகவல்களை அவர்களே தேடிப் பெற்றுக் கொள்ளவேண்டிய சூழலை இங்கு பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. ஆனால் அவற்றை மாணவர்களுக்கு ஒழுங்குபடுத்தி சிந்தனையை வழிப்படுத்துவதே ஆசிரியரின் கடமை ஆகும். அதற்காக ஆசிரியர் சமகாலத் தகவல்களை தம்வசத்தில் இற்றைப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்பதுடன் அதிகளவில் வாசித்திருக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஏனெனில் ஆசிரியர்களுக்கு தலையிடியாக இருப்பவர்கள் நூலகர்களே! அவர்கள் தமது நூலக இருப்புகளில் தேடித்தேடி தகவல்களை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தும் வேகத்துக்கு ஆசிரியர்களும் தீவிரமாக இயங்கவேண்டியுள்ளது.

இதனை எளிதாக விளக்குவதானால், பாடசாலை பாடவிதானத்தின் படி இந்த மாதம் இயற்கை அனர்த்தம் பற்றி படிப்பிப்பதாக திட்டமிடப்பட்டிருந்தால், பிரித் தானியா முழுவதும் இந்த மாதம் பொதுநூலகங்களின் சிறுவர் பிரிவில் இயற்கை அழிவுகள் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், போஸ்டர்கள், புகைப்படங்கள் என அனைத் தையும் தனியாக எடுத்து கண்காட்சிப்பிரிவில் காட்சிப் படுத்தியிருப்பார்கள். பாடசாலை நூலகங்களிலும் இதே நிலைமைதான். அந்த மாதம் முழுவதும் BBC தொலைக் காட்சியின் Educational Service பகல்நேர ஒலிபரப்பில் இயற்கை அநர்த்தங்கள் பற்றிய சுவாரஸ்யமான நிகழ்வுகள் மற்றும் பழைய செய்திகள் என தொகுத்து ஒலிபரப்பியபடி இருப்பார்கள். இவை அனைத்தையும் மாணவர்கள் தத்தமது வகுப்புத் தரத்திற்கேற்ப உள்வாங்கிக் கொள்வார்கள். பிற கென்ன,வகுப்பறையில் அவர்களது தெளிவுபடுத்தல்களுக்கு ஆசிரியர்களும் தயாராக இருக்க வேண்டும் அல்லவா?

கூட்டுத்திட்டமுறையில் இயங்கும் இந்நிலையை இலங்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் பாடசாலையில் கற்பிக்கும் அதே பாடத்தை ரியூசனில் கற்பிக்கின்றார்கள். இதனை மாணவர்களும் பணத்தைச் செலுத்தி படிக் கின்றார்கள். இது தேவையானதா? பள்ளிக்கூடத்தில் படிப்பது தொடர்பான விரிவான தேடல் வேண்டும் எனில் அப்பிள்ளை ரியூசனுக்குச் செல்லாது நூலகத்திற்குச் செல்ல வேண்டும் என்ற புரிதல் பெற்றொரிடம் ஏற்படவேண்டும். நூலகத்தில் இருக்கும் பல்வேறு வகையான நூல்களைத் தேடிப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை நூலகர் ஆர்வத் துடன் தேடி வழங்க வேண்டும். இதன் மூலம் வாசிப்புச் கலாச்சாரம் அச்சூழலில் பரிணமித்து வளர்ச்சியடையும். இன்று இது இருக்கின்றதா என்பது கேள்விக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்றைக்கு முன்தினமே இவ்வாண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை நிறைவடைந் திருக்கின்றது. புலமைப்பரிசில் பரீட்சைக்காக குடும்பம் முழுவதும் இணைந்து ஊர் கூடித் தேர் இழுப்பது போல அப் பிள்ளையை புலமைப்பரிசில் பரீட்சையை நோக்கி இரண்டு மூன்று வருடமாக அழுத்தம் கொடுத்து குதிரைக்கு சேணம் கட்டியது போல வேறெந்த சிந்தனையிலும் அவர்கள் ஈடுபடாமல் கண்காணித்து கற்பிக்கிறார்கள். வெட்டுப் புள்ளிக்கு மேற்பட்ட புள்ளி களைப் பெற்ற மாணவர்கள் சந்தோசத்தின் உச்சத்தில் பத்திரி கையின் விளம்பரத்தின் ஊடான வாழ்த்துக்கள், நிகழ்ச்சிகள் ஊடான வாழ்த்துக்கள், வானொலி ஊடாக வாழ்த்துக் களைப் பெற்று அறிவு பூர்வமான சமூகத்தில் தனக்கென வொரு இடத்தைப் பெற்று விட்டதாக பெருமிதம் கொள் கின்றது. வெட்டுப்புள்ளிக்கு குறைவாகப் புள்ளிகளைப் பெற்ற பிள்ளைகள் தொடர்பில் எவரும் கதைப்பதில்லை. இன்று இலங்கையில் கல்விச் சூழலில் பெறப்படும் ஆய்வுகளின் அடிப்படையில் புலமைப்பரீட்சையில் சித்தி யடைந்த 35 சதவீதம் மாணவர்களே பல்கலைக்கழக அனுமதி யைப் பெறுகிறார்கள். இவ்வாறான செயற்பாடு அறிவுபூர்வ மான சமூகத்தினை உருவாக்க மாட்டாது. முழு இலங்கையை யும் கணக்கில் எடுத்துக் கொண்டால் பணக்கார வர்க்கத்திலுள்ள பிள்ளை, மிக அறிவுபூர்வமான குடும்பச் சூழலில் வசதியுடன் வாழும் பிள்ளை போன் றோருடன் மூன்று நேர வேளைக்கு கூட சாப்பாடில்லாது வறுமைக் கோட்டுக்குள வாழும் குடும்பத்தின் பிள்ளையும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு சமதளத்தில் தோற்றுகின்றது. இவர்கள் எல்லோரையும் ஒரே தராசில் வைத்து நோக்க முடியாது.

பிள்ளைகளுக்கு சுயமாக சிந்திக்கின்ற சக்தியை குழந்தைப் பருவத்திலேயே அளிக்க வேண்டும். பாடத் திட்டத்தை மட்டும் பின்பற்றி படிக்க வைப்பதால் ஒரு மாணவனுக்கு மேலதிகமாக வாசிப்பதற் கான நேரம் கிடைக்காததுடன் காலக்கிரமத்தில் ஆர்வமும் இல்லாது போய்விடுகின்றது.

பிரித்தானியாவில் இவ்வாறு எந்தப் பரீட்சைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடித்திரிந்து கல்வி கற்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. தமிழர்கள் இரசியமாக ரியூசன்களை வழங்கும் நிலை இங்கு காணப்படுகின்றது. டியுஷன் கல்வி பிரித்தானிய தமிழரிடையே ஒர வியாபாரமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இது பிரித்தானிய பொதுவான கல்வியியல் சமூகத்தில் எடுபடுவதில்லை. ரியூசனில் சென்று கல்விகற்கச் சொல்லும் கலாச்சாரம் பிரித்தானியாவில் இல்லை.

உதாரணமாக இங்கிலாந்தையும் ஸ்கொட்லாந்தையும் பிரிக்கும் Hadrian wall என்ற சுவர் ரோமானியர் காலத்தில் கி.பி.122இல் கட்டப் பட்டிருந்தது. இது தொடர்பாக ஆசிரியர் சுவாரஸ்யமான அறிமுகத்தை மட்டும் கொடுத்துவிடுவார். பின்னர் பிள்ளைகள் Hadrian wall தொடர்பான நூல்களை பாடசாலை நூலகத்தில் பெற்று வீட்டில் வைத்து வாசிப்பார்கள். அதனை வாசிக்கும்போது ஆசிரியர் குறிப்பிடாத பல்வேறுபட்ட விடயங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படுத்தப்படுகின்றது. அதனைப் பற்றி குடும்ப அங்கத்தவருடன் மாலைவேளையில் தகவல்களை பரிமாறும் நிலை ஏற்படுத்தப்படுகிறது. மறு நாள் பாடசாலை செல்லும் போது Hadrian wall பற்றிய முழுமையான தகவல்களுடனேயே அப்பிள்ளை பாட சாலைக்கு செல்வதாக இருக்கும். இவ் விரிவாக்கம் வினாத் தாள்களை அடிப்படையாகக்கொண்டு கட்டமைக்கப்பட்ட ரியூசன் வகுப்புகளாலேயோ அல்லது புலமைப் பரிசில்கள் என்ற வரையறுக்கப்பட்ட கல்வித் திட்டத்தினாலும் நடைமுறைக்கு சாத்தியமற்றதாகிறது. இதுவொரு அடிப்படை விதி. இவ்விதியை மீறும்போதே வாசிப்புக் கலாச்சாரத்தைப் பற்றி நாங்கள் ஆழமாகக் கதைக்க வேண்டிய தகுதியினைப் பெறுவோம்.

அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நூலகத் துறையில் இணைந்துகொண்ட புதிய மாணவர் களிடையே பேசியபோது இவ்வாறு கேட்டிருந்தேன். "உங்களில் எத்தனைபேர் கடந்த மூன்று மாதங்களில் புத்தகங்கள் வாசித்திருக்கிறீர்கள்?" எனக்கு 27 மாணவர்கள் இருந்த அந்த மண்டபத்தில் நான்கு மாணவர்களிடமிருந்தே சாதகமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் கிட்டியது. வாசிப்புக் கலாச்சாரம் நலிவடைவது பற்றி மேடையில் கவலையுடன் கதைக்கும் சமூக சேவையாளரிடம் நான் கேட்பது இரண்டே இரண்டு கேள்விகள் தான். "நீங்கள் எத்தனை புத்தகங்களை கடந்த மூன்று மாதங்களில் வாசித்திருக்கிறார்கள்? உங்களுடைய பிள்ளைகளுக்கு கல்விப்புலம் சாராத, பாடநூல்களல்லாத எத்தனை புத்தகங்களை சுதந்திர வாசிப்புக்காக வாங்கிக் கொடுத்திருக்கிறீர்கள்?" நீங்கள் ஒவ்வொருவரும் மூன்று மாதத்திற்கு ஒரு புத்தகம் வீதம் உங்கள் சொந்தப் பிள்ளை களுக்கு வாங்கிக் கொடுத்திருந்தால் ஈழத்தின் தமிழ்ப் பதிப்புத்துறை இந்நிலையில் உச்சத்திற்கு சென்றிருக்கும்.

அறுபதுகளில் ஒரு தமிழ்ப் பதிப்பகம், ஒரு நூலின் 1000 பிரதிகளை அச்சமின்றி வெளியிட்ட காலம் போய் இன்று ஒரு நூலில் 300 பிரதிகளே அச்சிடுகின்றார்கள். அதில் 200 பிரதிகளைக் கூட விற்க முடியாத நிலையில் எழுத்தாளர்கள் காணப்படுகின்றார்கள். எத்தனையோ எழுத்தாளர்கள் சிறுவர் நூல்களை எழுதிவிட்டு விற்க முடியாத நிலையில் காணப்படுகின்றார்கள். காரணம் என்னவெனில் புத்தகங்களை வாங்கிக் கொடுப்பதில் பெற்றோர்கள் அக்கறை காட்டுவதில்லை. பின்னர் எவ்வாறு பெற்றோர்களுக்கு வாசிப்புக் கலாச்சாரத்தைப் பற்றி கதைக்க அருகதை உள்ளது?

வாசிப்புக் கலாச்சாரம் தொடர்பில் நான் முடிவாகச் சொல்ல விரும்புவது என்னவெனில், ஆரம்பப் பாடசாலையில் தரம் ஒன்றில் இணைகின்ற ஒரு பிள்ளைக்கு, அப்பிள்ளை தரம் ஐந்திற்கு வருவதற்கு முன்னரே பொதுவான நூல் வாசிப்பில் பயிற்சியளிக்கப்படவேண்டும். அதிலும் சிறுவர் பள்ளி ஆசிரியர்களினால் இது சமூக நன்மை கருதி வழங்கப்பட வேண்டும். சிறுவர் பள்ளி ஆசிரியர்களில் எத்தனை பேரிடம் வாசிப்பில் ஆர்வம் காணப்படுகின்றது என்பத மற்றொரு கேள்வியாகும். தொழிலுக்காக அதாவது சிறுவர் பாடசாலை ஆசிரியராக கடமையாற்றுவதால் பணம் கிடைக்கும் என்ற காரணத்திற்காக சிறுவர் பள்ளி ஆசிரியர்களாக அதிகம் பேர் பணியாற்றுகிறார்கள். சிறுவர் நூல்களை அதிகம் வாசிக்க வேண்டும் என்ற எண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரிடம் இல்லை.

அண்மையில் ஒரு நிகழ்ச்சியியின் முடிவில் சிறுவர் பள்ளி ஆசிரியர்களை தனிப்பட்ட முறையில் சந்திக்கும் போது வாசிப்புத் தொடர்பாகக் கூறினேன். அதற்கு அங்கிருந்த வர்களில் ஒருவர் சொன்னார் “தொப்பி பொருத்தமானவர்கள் போட்டுக் கொள்ள வேண்டும். நீங்கள் குறிப்பிடுவது நூற்றுக் நூறு வீதம் உண்மை. நாங்கள் வாசிப்பதில்லை. ஆனால் எங்களுடைய பிள்ளைகளை பாடப் புத்தகத்தை வாசிக்கச் சொல்லுகின்றோம்” என்றார்.

பாடப் புத்தகத்தினை படிப்பதே வாசிப்பு என நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் நிச்சயமாக பாடப்புத்தகத்தினை வாசிப்பது நூல்களை வாசிப்பதற்குள் அடங்காது. வாசிப்பு என்பது பரந்த வாசிப்பு அனுபவத்தை பாடநூல்களுக்கு அப்பால் பெற்றுக்கொடுப்பதாகும். அதுவே பரந்த அறிவை பசுமரத்தாணிபோல சிறு வயதிலேயே பெற்றுக் கொள்ள உறுதுணையாக அமையும். சிறுவர் முன்பள்ளி ஆசிரியர்கள் தமக்கிடையே முதலில் வாசிக்க பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். எத்தனை சிறுவர் நூல்கள் எங்களுடைய சூழலில் உள்ளது என்பது தொடர்பாக அறிந்திருக்க வேண்டும். சிறுவர்களுக்கு அந்நூல்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

புலமைப்பரிசில் பரீட்சையில் முழு இலங்கையிலும் 96.5 சதவீதமானவர்கள் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் சித்தியடையாதவர்கள். 3.5 சதவீதமான பிள்ளைகள் மட்டுமே சித்தியடைந்தார்கள் என்பதை நேற்றைய தினம் வலயகல்வி அதிகாரி மூலம் அறிந்து கொண்டேன். முழு நாட்டிலும் 3.5 சதவீதமாக சித்தியடைந்த பிள்ளைகளுக்காக எங்களுடைய சிறுவர் சமுதாயத்தின் ஒட்டுமொத்த வாசிப்பையும் அழித்துக் கொள்கின்றோம். இது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயம். இதனை மாற்றியமைக்க வேண்டும் என தனிப்பட்ட முறையில் பாடுபடுகின்றேன்.

2006ம் ஆண்டிலிருந்து இன்றுவரை பல லட்சம் சிறுவர் ஆங்கில நூல்களை வடக்குக் கிழக்கு மற்றும் மலையக பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள், தனியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகங்கள், பொது நூலகங்கள் அனைத்துக்கும் இலவசமாக அவர்களது கட்டிடப் படிக்கட்டுகள் வரை இலவசமாகக் கொண்டுபோய் சேர்த்திருக்கிறேன். பிரித்தானியாவில் உள்ள Books Abroad நிறுவனமானது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள பின்தங்கிய பாடசாலைகளுக்கு புத்தகங் களை அன்பளித்து வருகின்றது. புங்குடுதீவு சர்வோதயத் திற்கு 2000 மேற்பட்ட சிறுவர் நூல்களை பெற்று நேரில் சென்றுஒப்படைத்திருக்கிறேன். இணுவில் பொது நூலகத்தில் சிறுவர் நூலகத்துக்கும் நூல்களையும் பெற்றுக் கொடுத்தேன். இங்குள்ள பாடசாலைகள் அனைத்திற்கும் சிறுவர் நூல்களைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றேன். மிக முக்கியமாக யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு 08 பலட் நூல்களைப் பெற்றுக் கொடுத்து அந்த நூல்களை சிறுவர் பகுதியில் வைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றேன். ஒரு பலட்டில் 30 பெட்டி இருக்கும். ஒரு பெட்டியில் 40-50 நூல்கள் இருக்கும். இவ்வளவு நூல்களை யாழ்ப்பாணப் பொதுநூலகத்திற்கு கொடுத்திருக்கின்றேன். நான் வழங்கி வரும் நூல்கள் சிறுவர்களின் பாவனையால் பழுதடைந்தா லும், தொலைந்தாலும் பிரச்சினையில்லை. அவர்களுக்கு மீண்டும் இரண்டாண்டுகளில் மேலதிக நூல்களைப் பெற்றுக்கொடுக்கலாம்.

நூல்கள் சிறுவர்களால் பாவிக்கப்பட்டு சிதைவடை வதானால் அது கவலைக்குரிய விடயமல்ல. இப்புத்தகங்கள் அவர்களின் பாவனைக்கு உட்பட்டே சிதைவடைகின்றது என்பதால் இது எதிர்பார்க்கக்கூடியதே. பழுதடையும் நூல் களுக்கு மேலதிகமாக நூல்களை பிரதியீடாக நான் வழங்கத் தயாராக உள்ளேன் என்பதால், இவ் வாய்ப்பை அனைத்து நூலகங்களுக்கும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தமிழ் மொழியில் சிறுவர் நூல்களை அதிகம் வழங்கு வதற்கான பொருளாதார வசதியைப் பெற்றுத்தர முன்வந்தா லும், அதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கின்றது. இளையோர் நூல்களையும் வளரிளம் பருவத்தினருக்குரிய நூல்களையும் எழுதுவதற்கு எழுத்தாளர்கள் அதிகம் இல்லை. எம்மிடையே இருக்கும் பெரும்பான்மையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்கள் சிறுவர் நூல்கள் என்றவுடன் பாலர் நூல்களையே நினைக்கின்றார்கள். சிறுவர் பாடல்கள் கொண்ட நூல்கள், சிறுவர் நீதிநூல்கள் போன்றவற்றையே சிறுவர் நூல்கள் என்ற வகைக்குள் உள்ளடக்குக்கின்றார்கள். அனைத்து சிறுவர் நூல்களும் நீதிக் கருத்துகளை உள்ளடக்கியதாக வெளிவருகின்றது. இன்று அவர்களுக் கென விட்டுவைத்திருக்கும் சமூகம் அப்படி நீதிவழி இயங்கும் சமூகமும் அல்ல. உண்மை அதுவல்ல. நவசோதி யின் "ஓடிப்போவன்", அநு.வை. நாக ராஜனின் "காட்டில் ஒரு வாரம்", திருக்கோணமலை ச.அருளானந்தத்தின் "காட்டில் கலவரம்", உசுல பீ.விஜய சூரியவின் "அம்பரய" போன்ற வளரிளம் பருவத்தினருக் கான நூல்களைத்தான் விரல் விட்டுக் கூறமுடியும்.

சிறுவர் இலக்கியவாதிகள் பலரும் பல பாலர் நூல்களை தற்போதும் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். பாலர் நூல்களுக்கு அடுத்த கட்டமாக வளரிளம் பருவத் தினருக்கான நூல்களை உருவாக்குவதற்கான முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படுவதாக இல்லை.

விண்வெளிப் பயணம் தொடர்பாக, சிறுவர்களுக் கான பயணக்கதைகள் தொடர்பாக, உலக நாடுகளின் சிறுவர்களின் சமூக வாழ்வு தொடர்பாக என எத்தனையோ நூல்களை சிங்கள மொழியில் கண்டிருக்கிறேன். தமிழில் ஏன் இவைகள் எழுதப்படவில்லை என்ற கேள்வி எப்போதும் எனக்குள்ளது. உதாரணமாக "பூதத்தம்பி கோட்டை" என்றால் என்ன என்பது பற்றியும், அதன் பின்னணி வரலாறு பற்றியும் விரிவான விளக்கத்துடனும், ஒளிப்படத்துடனும் ஒரு சிறுநூலில் எமது பல்கலைக்கழக வரலாற்றுத் துறை யினர் எடுத்துக் காட்ட முடியும். இப்படியாகவே மந்திரி மனை, நிலாவரைக் கிணறு, யாழ்ப்பாணக் கோட்டை, திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னீஸ்வரம், மடுமாதா திருக்கோவில் யாழ்ப்பாணக் கோட்டை, கந்தரோடை என்பன தொடர்பாக வளரிளம் பருவத்தினருக் கான நூல்கள் எழுதப்படலாம். புவியியல் ரீதியாக, சமூக வரலாற்று ரீதியாக பல சுவாரஸ்யமான விபரங்களைக் கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலை ஆர்வத்தையூட்டும் வகையில் உருவாக்கலாம்.

இனிமேலாவது எங்களுடைய எழுத்தாளர்களுடைய சிந்தனை மாற்றம்பெற வேண்டும். அதன் பின்னரே வாசிப்புக் கலாச்சாரத்தை வளர்ப்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். அதுவரையில் மேடையில் வாசிப்புப் பற்றி உணர்ச்சி பொங்க உரையாற்றுவதில் பயனில்லை. தற்போதுள்ள இளைய தலைமுறையிடம் ஆர்வத்தைத் தூண்டாத வரட்சி யான நூல்களை வாசிக்கும்படி திணித்தால், எதிர்மறையான விளைவுகள் எங்களை சலிப்படையச் செய்யும்.

இதுவரையிலும் வாசிப்புத் தொடர்பாக விரிவான நாங்கள் அறிந்திராத கோணத்தில் கருத்துக்களை வழங்கியியமைக்கு நன்றி. அந்த வகையில் பாடசாலை மட்டத்தில் நீங்கள் புத்தகங்கள் பல அன்பளிப் புச் செய்து ஊக்குவித்திருக்கிறீர்கள். அதனை விட எவ்வாறு வேறு வழியில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதென்பது பற்றிக் கூற முடியுமா?

இலங்கையில் தற்போது புதிய வேலைத்திட்டம் அமைச்சர் அரியவிராஜ் காரியவாசம் அவர்களது தலைமை யில் மேற்கொள்ளப்படுகின்றதனை அறிய முடிகின்றது. அது தொடர்பாக ஆரம்பக் கட்ட கூட்டம் நிறைவுற்று அதன் அறிக்கை ஒன்றும் வாசித்திருந்தேன். பாடசாலைகளுக்கு இது தொடர்பான சுற்றுநிருபம் அனுப்பப்பட்டிருக்கும் என நினைக்கின்றேன்.

நீண்ட காலமாக பிரித்தானியாவில் நடைமுறை யிலுள்ள ஒரு திட்டத்தை இங்கு புதிதாக அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள். தமிழ்ப் பிரதேசங்களின் பாடசாலை களுக்கு கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான நூல்கள் கடந்த ஆண்டு இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. குமரன் பதிப்பகம், பூபாலசிங்கம் பதிப்பகம், சேமமடு பதிப்பகம் என பல நிறுவனங்களுக்கு ஊடாக சிறுவர் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு வட கிழக்குப் பிரதேசங்களில் ஒவ்வொரு தமிழ்ப் பாடசாலைக்கும் சிறுவர் நூல்கள் வழங்கப்பட்டது. இதனை வழங்குவதில் பெரும் போராட்டம் நடை பெற்றிருந்ததையும் அறியமுடிந்தது. என்னவெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கு பாடம் சார்ந்த நூல்களே அதிகளவில் வேண்டும் என்று அதிபர்களும் ஆசிரியர்களும் அழுத்தம் கொடுத் திருக்கிறார்கள்.

இந்த நிலையிலும் அரசாங்கம் வளைந்து கொடுக்காமல், பாடம் சார்ந்த பயிற்சி நூல்கள் அல்லாத பரந்த வாசிப்பிற்கான நூல்களே 85 சதவீதம் பாடசாலை களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் 15% ஆன பயிற்சிப் புத்தகங்களையே கொள்வனவு செய்யலாம் என்ற வரையறை யையும் விதித்தது. இருப்பினும் பாடசாலைகளின் அழுத்தம் காரணமாக பயிற்சிப் புத்தகங்கள் அதிகமாகவும் வாசிப்பிற் கான நூல்கள் குறைவாகவும் சில இடங்களில் பதிப்பகங்களி னால் சமரசம் செய்துகொள்ளப்பட்டு நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இது இவ்வாறிருக்க பாடசாலை நூலகங்களுக்கான ஏராளமான நூல்கள் இந்திய அரசினா லும் கையளிக்கப்பட்டுள்ளது. இந்திய உயர் ஸ்தானியராலயத்தின் ஊடாகவும் சிறுவர்களுக்கான தமிழ் நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 48 பாடசாலைகளுக்கு வழங்கப் பட்டுள்ளதாகவும் அறியமுடிந்தது.

இந்நிலையில் பாடசாலை நூலகங்களில் உள்ள நூல்களை மாணவர்களிடம் எவ்வாறு கொண்டு செல்லாம் என்று நோக்கலாம். கல்வியமைச்சரான அகிலவிராஜ் காரியவசம் அவர்கள் புதிய திட்டமொன்றைக் கொண்டு வந்திருக்கின்றார். என்னவெனில் அதிகமான புத்தகங்களை வாசிக்கும் பாடசாலை மாணவர்களுக்கு உலோகப் பதக்கங் கள் வழங்குவதாகும். பாடசாலை நூலகத்தில் ஒவ்வொரு மாணவனும் இத்திட்டத்தின் அங்கத்தவராக கட்டாயம் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு இணைந்த மாணவருக்கு ஒரு சிறிய பதிவுப் புத்தகம் வழங்கப்படும். அதன் உள்பக்கத்தில் திகதி, நூலின் பெயர், நூலின் ஆசிரியர் பெயர், நூலைத் திருப்பி ஒப்படைக்க வேண்டிய நாள் என்பன குறிப்பிடப்பட்டிருக்கும். அதற்கடுத்ததாக வாசகர் குறிப்பு, ஆசிரியர் குறிப்பு, பெற்றோர் குறிப்பு எழுதுவதற் கான இடம் வழங்கப்பட்டிருக்கும். புத்தகத்தினைப் பெற்றுக் கொள்ளும் மாணவர் பெற்றுக் கொள்ளும் திகதி, புத்தகத்தின் தலைப்பு, ஆசிரியர் என்பவற்றை எழுதிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு புத்தகத்தினைப் பெற்றுச் கொள்வார். அப்புத்தகத்தினை வீட்டுக்குக் கொண்டு சென்று வாசிப்பார். அப்புத்தகத்தில் கூறப்படுபவை மற்றும் அப் புத்தகத்தினூடாக மாணவர் அறிந்துகொண்ட விடயங்கள் என்பவற்றை சுருக்கமாக தனது குறிப்புக்குரிய இடத்தில் எழுதுவார். அதன் கீழ் பெற்றோர்கள் வாசிப்புத் தொடர்பில் பிள்ளையிடம் அவதானித்த விடயங்களை எழுதி ஒப்பமிடுவார்கள். அதாவது புத்தகங்களை வாசிக்கும்போது சத்தமாக வாசித்தாரா அல்லது மௌனவாசிப்பில் ஈடுபட்டாரா என்றும், வாசித்தவற்றின் உள்ளடக்கத்தினை தன்னுடன் பகிர்ந்து கொண்டார் என்பன போன்ற விடயங்களை பெற்றோர் தமக்குரிய இடத்தில் எழுவார்கள். அதன் கீழ் ஆசிரியர் குறிப்பு எழுதப்படும். அதில் மேற்கண்ட நூல் குறித்த மாணவரால் வாசிக்கப்பட்டதை ஓரிரு கேள்விகளினூடாக கிரகித்து அந்த மாணவனின் நூலக ஆசிரியர் எழுதுவார். இதுவொரு புத்தகத்தை வாசித்து முடிக்கும் கால கட்டத்தில் எழுதப்படும் குறிப்பாக இருக்கும். இவ்வாறு ஒரு மாணவர் ஐம்பது புத்தகங்களை வாசித்தவுடன் இக் குறிப்புப் பதிவேடு நிறைவடையும். இது நிறைவடைந்தவுடன் வெள்ளிப் பதக்கம் ஒன்று அம்மாணவருக்கு வழங்கப்படும். அதன் பின்னர் அப் பிள்ளை தொடர்ந்து வாசிப்பில் ஈடுபட்டபடி இருக்கும். எழுபத்தைந்து புத்தகங்கள் வாசித்து முடித்தவுடன் தங்கப் பதக்கம் வழங்கப்படும். நூறு புத்தகங்கள் வாசித்து முடிந்தவுடன் பிளாட்டினம் விருது வழங்கப்படும். இந்த விருதுகளைப் பெற்ற பிள்ளை அடுத்த வகுப்பில் உயர்ந்த, ஆளுமையுள்ள, தலைமைத்துவ தகைமைகள் கொண்ட பிள்ளையாக மாற்றமடையும்.

இது கல்வித் திணைக்களத்தால் அறிமுகப் படுத்தப் பட்ட ஒரு நல்ல திட்டம் எனலாம். இங்கிலாந்தில் இதுவே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் திட்டமாகும். அதனையே கல்வி அமைச்சர் இலங்கையில் பரிசோதிக்க முன்வந்துள்ளார்.

ஆனால் இதனை அதிபர்களும் ஆசிரியர்களும் எவ்வாறு நடைமுறையில் செயற்படுத்தப் போகிறார்கள் என்பதிலிருந்தே இத் திட்டத்தின் வெற்றிவாய்ப்பினை அறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். எதிர்காலத்தில் சமூகப் பிரக்ஞை உள்ள ஆசிரியரும் அதிபர்களும் பாடசாலைகளில் இதனை ஊக்குவிக்கலாம். ஆனால் கல்வித் துறையில் அக்கறையில்லாத ஆசிரியர் சிலர் இத் திட்டம் தமது வேலைப் பளுவைக் கொண்டு வருதாக குற்றம் சாட்டி, இதனை நடைமுறைப்படுத்த அனுமதிக்க முடியாது எனத் தடைக்கற்களை பிரயோகிக்கக் கூடும். இத் திட்டம் வெற்றிகரமாக்கப்படுமா என்பதை எதிர் காலமே பதில் சொல்லும். ஆனால் பிரித்தானியாவில் இது வொரு அடிப்படை நடைமுறைத் திட்டமாகவே காணப்படு கின்றது. எங்களுடைய பிள்ளைகள் தமது பாடசாலையில் இவ் விருதுகளைப் பெற்றவுடன் பெருமையுடன் வீட்டுக்கு வருவார்கள். எம்மிடம் காட்டி மகிழ்வார்கள்.

அதிக புத்தகங்களை வாசிப்பதால் விரிவான அறிவு கிடைக்கும். இதனால் சிறு பிள்ளைகளுக்கு புத்தகத்தை எடுத்தவுடன் நித்திரை வரமாட்டாது. புத்தகத்தை வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் பெரியவர்களுக்கு இருந்தாலும் அவர்களுடைய உடல் அதனை ஏற்றுக் கொள்ளாது. சோர்வில் நித்திரையே வந்து விடும். காலம் காலமாக இது பழக்கத்தில் இல்லை என்பதே இதற்கான காரணமாகும். பிரித்தானியாவில் ரயில்களில் பயணம் செய்பவர்கள் புத்தகம், பத்திரிகையில் ஏதாதொன்றை வாசித்துக் கொண்டி ருப்பார்கள். இணையத்தினூடாக புத்தகங்களை வாசித்தா லும் சரி புத்தகத்தினூடாக பக்கங்களைப் புரட்டி வாசித்தாலும் அறிவு உள்ளீர்க்கப்படும். இலங்கையில் கொண்டுவரப்பட்ட இத் திட்டம் நல்ல திட்ட மெனினும் அத் திட்டத்தை செயற்படுத்தினால் எதிர்காலத்தில் அறிவு பூர்வமான சமூகத்தினை உருவாக்க முடியும்.

இவ்வளவு நேரமும் தன்னுடைய வாழ்க்கை வரலாற்று அனுபவங்கள் மூலம் அரிய பல கருத்துக்களைத் தந்துதவிய நூலகவியலாளர் திரு.என் செல்வராஜா அவர்களுக்கு நூலகம் நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.. நன்றி வணக்கம்.

எனக்கும் இவ்வாறான சந்தர்ப்பத்தைத் தந்துதவிய உங்களுக்கும் நூலக நிறுவனத்துக்கும் மிக்க நன்றி. வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜா செல்வராஜா (பி. 1954 ஒக்ரோபர் 20) ஈழத்தின் குறிப்பிடத்தக்க நூலகர்களில் ஒருவர். 1978 முதல் நூலகப் பணிகளில் ஈடுபட்டு வருபவர். நூல் தேட்டம் தொகுப்புக்களின் மூலம் ஈழத்து நூல்களைத் தொடர்ச்சியாகப் பட்டியலாக்கி ஆவணப்படுத்தி வருபவர். நூலகவியல், நூலகர்கள், எழுத்தாளர்கள், இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறு நூல்களை எழுதியும் தொகுத்தும் ஆவணப்படுத்தி வருபவர். அயோத்தி நூலக சேவைகள் நிறுவனம், ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகம் மற்றும் ஆய்வு நிறுவனம் ஆகியவற்றை நிறுவிப் பணியாற்றி வருபவர். பல்வேறு நூலகங்களின் ஆலோசகராகப் பங்களிப்பதுடன் Books Abroad மூலம் இலட்சக் கணக்கான ஆங்கில நூல்களை இலங்கை முழுவதுமுள்ள பல்வேறு நூலகங்களுக்குக் கிடைக்கச் செய்துள்ளார்.

2018இல் பதிவு செய்யப்பட்ட செல்வராஜாவின் வாய்மொழி வரலாற்றுப் பதிவு அந்த ஆண்டு வரையான தகவல்களை மட்டுமே கொண்டுள்ளது என்பதுடன் இயல்பான வாய்மொழிப் பதிவு என்ற வகையில் வாய்மொழி வரலாற்றுப் பதிவுகளில் ஏற்படும் விடுபடல்கள் போன்றவையும் இருக்கலாம். குறித்த வாய்மொழி வரலாற்றின் ஆவண முக்கியத்துவம் கருதி எழுத்துருவாக்கப்பட்டு இந்த நூலாக வெளியாகிறது.

ISBN : 9789550958511
9789550958511

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org